ISSN 2012 - 6700

இதழ் - 16

# பூங்காவனம்

கலை இலக்கிய சமூக சஞ்சிகை



திருமதி. ஷானாஸ் பர்வீன் ஃபிர்தௌஸ்

பூங்காவனம் இலக்கிய வட்டம்

With Best Compliments From:-



# பூங்காவனம்

தோற்றம் - 2010 மே 30
இதழ் 16 - 2014 மார்ச்
ISSN 2012 - 6700



**பிரதம ஆசிரியர்**

ரிம்ஸா முஹம்மத்

**துணை ஆசிரியர்கள்**

எச்.எப். ரிஸ்னா
டப்ளியு.எம். வஸீர்

**ஆலோசகர்**

ஏ.சீ. ஜரீனா முஸ்தபா


**வங்கித் தொடர்புகளுக்கு**

Commercial Bank,
Mount Lavinia Branch,
M.F. Rimza
A/C No :- 8930020287.

என்ற இலக்கத்திற்கு காசை வைப்பிலிட்டு அதன் பற்றுச்சீட்டை அனுப்ப வேண்டும். காசுக் கட்டளையாயின் (M.F. Rimza - Dehiwala Post Office) என்று குறிப்பிட்டு அதற்கான பற்றுச் சீட்டையும் அனுப்ப வேண்டும். காசோலையாயின் குறுக்குக்கோடு இடப்படாத காசோலையை M.F. Rimza எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

தனிப்பிரதி - 100/=
தபால் மூலம் - 140/=
வருட சந்தா - 600/=.


**தொடர்புகளுக்கு**

"Poongavanam"
21 E, Sri Dharmapala Road,
Mount Lavinia,
Sri Lanka.

**Email:-**
poongavanam100@gmail.com

**Website:-**
www.poongavanam100.blogspot.com

**Phone:-**
0094 (0) 775009222
0094 (0) 719200580


புதிய ஆக்கங்களும், இச்சஞ்சிகை பற்றிய விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.
நூல் விமர்சனத்துக்கு அனுப்புபவர்கள் நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப்படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# உங்களுடன் ஒரு நிமிடம்...

எல்லாம் வல்ல இறைவனுக்கே புகழ் அனைத்தும். பூங்காவனம் இதழ் 16 இனூடாக உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. தொடர்ந்தும் எமது வாசகர்கள் எமக்கு வழங்கிவரும் அன்பும் ஆதரவும் எம்மை சந்தோஷத்தில் திளைக்க வைத்திருக்கின்றன. வாசகர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் முதற்கண் எமது நன்றியைக் கூறிக்கொள்கின்றோம்.

இன்று ஆதிகாலம் மாறி மில்லேனியம் என்ற பெயரில் விஞ்ஞான யுகம் வெற்றி நடைபோடுகின்றது. இதற்கான காரணமே ஒடுக்கப்பட்டிருந்த மனிதனின் வாழ்கைப் போக்கு மாற்றமடைந்திருப்பதேயாகும். உரிமைகள் ஆண் இனத்தை சார்ந்தவர்களுக்கு மட்டும்தானா? அந்த உரிமைகளுக்கு உரித்தானவர்கள் ஆண்கள் மட்டுமா? என்ற அடிப்படைக் கேள்விகள் இன்றும் எம் சமூகத்தின் மத்தியில் சர்ச்சைக்குரியதாகவே காணப்படுகின்றது. மகளிர் தினம் பெண்களின் உரிமைகளை சீர்செய்யவே உருவான தினம், நாடுகளில் சிறப்பாக கொண்டாடப்படும் ஒரு தினம் என்றெல்லாம் பல கருத்துக்களை நாம் கூறியபோதும் பெண்களுக்கான சுதந்திரம் சீர்குலைந்த நிலையிலேயே உள்ளது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இலை மறைகாய்களாக எத்தனையோ பெண்களின் ஆற்றல்கள் மறைந்தது மட்டுமல்லாமல் மங்கி மடிந்தும் போய்விட்டது. இதற்கான காரணம் என்ன? ஆணாதிக்கத்தின் அடக்குமுறையா? அல்லது பெண்கள் தமக்குள்ளே வரையறுத்துக்கொண்ட சம்பிரதாயங்களா?

பாடசாலை செல்லும் பச்சிளம் குழந்தை மீது பாலியல் துஷ்பிரயோகம்.. கண்களை போன்ற பெண்களை வளர்த்து கரைசேர்க்க வழியில்லாமல் வாட்டும் சீதனக்கொடுமை.. படித்தது போதும் வீட்டில் சோறு வடிப்பது உன் வேலை என்று கூறும் கணவனின் கட்டளை.. ஒரு பெண் பிறந்ததில் இருந்து சாகும் வரை இப்படி பல கட்டுப்பாடுகள்.

காலங்கள் நமக்காக காத்துக் கிடப்பதும் இல்லை. மாற்றங்கள் இவ்வுலகில் தன் தரிசனத்தை கொடுக்க மறுப்பதுமில்லை. அதன் பயனால் இன்றைய பெண்களின் வாழ்க்கை ஒரு புதிய திருப்பத்தை தனதாக்கிக்கொண்டுள்ளது. ஆம் பெண்களுக்கான சுதந்திரம், உரிமைகள் மறுபிறவி எடுத்துள்ளது என்றால் அது மிகையாகாது. இதற்குக் காரணம் பெண்ணியம் பேசும் சமூக சீர்திருத்தவாதிகளோடு இன்று ஆண்களும் இணைந்திருப்பதுதான். பெண்களுக்காக ஆண்களும் குரல்கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள். தம்மளவில் பெண்களுக்கு இதுவே பெரிய முன்னேற்றம்தான். ஆதலால் இனிவரும் தலைமுறை ஆண், பெண் பாகுபாடு என்ற கட்டமைப்புக்களை உடைத்து, எல்லாத் துறைகளிலும் அனைவரும் கால்பதித்து முன்னேறலாம் என்ற நம்பிக்கை முளைவிடத் தொடங்கியிருக்கின்றது!!!

- ஆசிரியர்

# பூங்காவினுள்ளே


## நேர்காணல்

திருமதி. ஷானாஸ் பர்வீன்
ஃபிர்தௌஸ்

## கவிதைகள்

எல். தேனுஷா
ஈழக்கவி
குறிஞ்சி நிலா
த. எலிசபெத்
எச்.எம். சுஜப்
வவுனியா சுகந்தினி
எம்.எம். அலி அக்பர்
மிகிந்தலை ஏ. பாரிஸ்
வெலிப்பன்னை அத்தாஸ்
நிந்தவூர் ஷிப்லி
நமுனுகுல வி. சந்திராதேவி

## சிறுகதைகள்

மருதூர் ஜமால்தீன்
எஸ்.ஆர். பாலசந்திரன்
சூசை எட்வேட்
நமுனுகுல வி. சந்திராதேவி

## கட்டுரைகள்

கவிஞர் ஏ. இக்பால்
கா. விசயரத்தினம்
கா. தவபாலன்

## நூல் மதிப்புரை

சுபாசினி சந்திரகாந்தன்

## எழுத்தாளர் அறிமுகம்

## வாசகர் கடிதம்

## நூலகப்பூங்கா



# நேர்காணல்

## திருமதி. ஷனாஸ் பர்வீன் ஃபிர்தௌஸ்

சந்திப்பு
ரிம்ஸா முஹம்மத்

**உங்களைப் பற்றிய அறிமுகத்தைக் குறிப்பிடுங்கள்?**

நான் கொழும்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டுள்ளேன். கொழும்பைச் சேர்ந்த எஸ்.எம். அன்சார், காலஞ்சென்ற மெய்தீம் பீபீ ஆகியோரின் மூத்த மகளாகப் பிறந்த எனக்கு நான்கு உடன் பிறப்புக்கள். ஒரு தங்கையும், மூன்று தம்பிமாரும் உள்ளனர். கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் கல்வி கற்றேன். பிறகு பல இடங்களில் தொழில் நுட்பக் கல்வியைக் கற்றேன். இன்று ஒரு தையல் ஆசிரியையாக மாணவிகளுக்கு பல வருடங்களாக தையல் கலையைக் கற்பித்து வருகின்றேன்.

**தையல் ஆசிரியையாக மட்டுமல்லாமல் எழுத்துத் துறையிலும் ஈடுபட்டு வருகின்றீர்கள். உங்களது எழுத்துலக பிரவேசம் குறித்து என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

நான் சிறுவயதிலிருந்தே பத்திரிகை வாசிப்பது, வானொலி கேட்பது போன்ற விடயங்களில் அதிக அக்கறை காட்டி வந்தேன். அந்த பழக்கத்தால் காலப் போக்கில் பத்திரிகைகளுக்கும், வானொலிக்கும் நான் பல ஆக்கங்களை எழுதி அனுப்பினேன். அவை பத்திரிகைகளிலும், வானொலிகளிலும் களப்படுத்தப்பட்டன.



**எவ்வகை சார்ந்த விடயம் பற்றி பத்திரிகைகளில் நீங்கள் எழுதி வருகின்றீர்கள்?**

நான் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள், விவாதங்கள், தையல் குறிப்புக்கள், சமையல்



குறிப்புக்கள் போன்றவற்றை எழுதியனுப்புவதுண்டு. அவ்வாறு வெளிவந்த ஆக்கங்களை நான் கட்டுக் கட்டாக சேகரித்து கோப்புக்களாக்கி வைத்துள்ளேன். இதுதவிர குறுக்கெழுத்துப் போட்டியிலும் பங்குகொள்வேன்.

என் மனதைப் பாதித்த விடயங்களை கருப்பொருட்களாக வைத்து சிறுகதைகளையும் எழுதியுள்ளேன். இந்த சிறுகதைகள் பூங்காவனம் சஞ்சிகையிலும், மித்திரன் வாரமலரிலும் வெளிவந்துள்ளன.

**எழுத்துத் துறையில் நீங்கள் ஈடுபடுவதற்கு முன்னோடியாய் இருந்தவர்கள் பற்றி குறிப்பிடுங்கள்?**

எழுத்துத் துறையில் ஈடுபடுவதற்கு முன்னோடியாய் இருந்தவர்கள் நான் கல்வி கற்ற பாடசாலை பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் தான்.

**உங்கள் குடும்பத்தினருக்கும் கலைத்துறையில் ஈடுபாடு உண்டா?**

நாங்கள் சிறுவயதினராக இருக்கும் போது என்னுடைய தாயின் தகப்பனுக்கு (தாத்தாவுக்கு), என்னுடைய தாயார், தாயாரின் சகோதரிகள் எல்லோரும் இரவில் (இஷாத் தொழுகையின் பின்னர்) அந்தந்த நாள் பத்திரிகைகளை வாசித்துக் காட்டுவார்கள். காலப்போக்கில் நானும், எனது தங்கை பரீனாவும் பத்திரிகைகளை வாசித்துக் காட்டுவோம். அந்தப் பழக்கமே எங்களை பத்திரிகைகள், புத்தகங்கள், நாவல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிப்பதற்கு ஊக்குவிப்பாக அமைந்தது என்று கூற வேண்டும்.

**எவ்வகையான புத்தகங்களை அல்லது யாருடைய புத்தகங்களை நீங்கள் அதிகமாக வாசிக்கிறீர்கள்? காரணம் என்ன?**

அந்தக் காலத்தில் எனது தாயார், அவரது சகோதரிகள் அநேகமாக இந்தியப் புத்தகங்களைத்தான் வாங்கி வாசிப்பார்கள். அவர்கள் வாசித்த பின் நாங்கள் அவற்றை எடுத்து வாசிப்போம். ஆனந்த விகடன், கல்கி, ராணி, குமுதம், இத்தியாதி இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். இது தவிர இந்துமதி, சிவசங்கரி, சுஜாதா, மணியன், ரமணி சந்திரன் ஆகியோரின் புத்தகங்களையும் விரும்பி வாசிப்பதுண்டு.



இப்போதெல்லாம் நிறையவே இலங்கைக் கலைஞர்களின் புத்தங்கள் வாசிக்கக் கிடைப்பதால் எல்லோருடைய புத்தகங்களையும் விரும்பி வாசிப்பேன்.

**தையல் கலைகளிலும், சமையல் கலைகளிலும் நீங்கள் சிறப்பாக தேர்ச்சி பெற்றுள்ளீர்கள். இத்துறையில் உங்களது பங்களிப்பு பற்றியும் இதற்காக உங்களை ஊக்குவித்தவர்கள் பற்றியும் உதவியவர்கள் பற்றியும் குறிப்பிடுங்கள்?**

எனக்கு 12 வயதிலிருந்து தையல் கலையில் ஆர்வம் அதிகம். என்னுடைய தாயார் நன்றாக தைப்பார்கள். அவரின் பக்கத்தில் இருந்து அவர் துணியை வெட்டும் அழகைப் பார்த்து அதே போல் நானும் துணியை வெட்டித் தைப்பேன்.

அந்த ஆர்வத்தில் அரச தையல் பயிற்சி நிலையத்தில், கைத் தையல் வகுப்பில் சேர்ந்து கற்றேன். அதற்குப் பிறகு Scientificial Method இல் தையல் பயிற்சி பெற்று Diploma சான்றிதழ் பெற்றேன். பிறகு கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தையல், சமையல், கேக் அலங்காரம், பெயின்டிங், சிகை அலங்காரம், பூ வேலைப்பாடு போன்றவற்றையும் சிறப்பாகக் கற்றேன். பிறகு படிப்படியாக எல்லாப் புதிய நுணுக்கங்களுடன் கூடிய தொழில் நுட்ப பாடங்களை முறையாக கற்கத் தொடங்கினேன்.

முதன் முதலாக கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் பாடசாலை முன்னாள் அதிபர் அவர்கள் என்னிடம் சிகையலங்கார வகுப்பை மாணவிகளுக்காக நடாத்தும்படி கேட்டுக் கொண்டார்கள். பல வருட காலமாக சிகை அலங்கார வகுப்பை நான் அங்கு நடாத்தி வந்தேன். தொடர்ந்து வெளியிடங்களிலும் கற்பித்துக் கொண்டே, வீட்டிலும் வகுப்புக்களை நடாத்தினேன். இப்போது வீட்டில் மாத்திரமே எனது எல்லா வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றேன். தையல் வகுப்புக்களில் தற்போது Block இல்லாமல் (Tailoring Method) புடைவையில் கீறி புது முறையில் சொல்லிக் கொடுக்கிறேன்.

**தற்போது சமையல் கலை வகுப்புக்களையும் நடாத்தி வருவதாக அறிகின்றேன். அதுபற்றி குறிப்பிடுங்கள்?**

நானும் என்னுடன் இணைந்து எனது சகோதரியுமே சமையல் கலை வகுப்புக்களை நடாத்தி வருகின்றோம். இந்தத் துறையிலே எல்லாப் புதுப்புது வடிவங்களிலும் கற்பிக்கின்றோம். General Cookery, Bakery, Cake Icing, Stuctures, Suger Flower இப்படி பல புதிய விடயங்களை ஒரு நாள் வகுப்புக்களாகவும் நடாத்தி வருகின்றேன்.

**உங்களது வாழ்விற்கு அர்த்தம் கொடுக்கும் பணியாகத்தான் உங்கள் பணிகளைக் கணிக்கிறீர்களா? ஏன்?**

எழுத்துத் துறையை எடுத்துக் கொண்டால் என் சிற்றறிவுக்கு எட்டிய விடயங்களையே நான் எழுதி வருகின்றேன். சமையல் கலை, தையல் கலை ஆகியவற்றை எடுத்துக் கொண்டால் வெறுமனே இருக்காமல் நான் கற்ற கலைகளை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதில் ஒரு ஆத்ம திருப்தி எனக்குள் ஏற்படுவதை உணர்கின்றேன். அந்த வகையில் என்னுடைய பணியை மிகவும் திருப்திகரமாக செய்து வருகின்றேன்.

என்னிடம் கற்கும் மாணவிகளின் திறமைகளை வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக அவர்களின் படைப்புக்களை வருடா வருடம் கண்காட்சி நிகழ்ச்சிகளை செய்து காட்சிப்படுத்தி வருவது மட்டுமல்லாமல் அவற்றுக்கு சிறந்த கல்விமான்களைக் கொண்டு சான்றிதழ்களும், கேடயங்களும் வழங்கி வருகின்றேன்.



**சமையல் கலைகளின் இன்றைய போக்கு பற்றிய உங்களது கருத்து யாது?**

இன்றைய இளைய தலைமுறையினர் இன்டர்நெட் மூலம் சமையல் கலைகளைப் பார்த்து, தாமே அதுபோல் செய்து பார்க்கின்றனர். அது பரவாயில்லை. என்ன இருந்தாலும் ஒரு வகுப்பிற்குப் போய் ஆசிரியரிடம் முறையாகக் கற்று, சக மாணவிகளுடனும் பழகி, தனது கைகளினால் செய்முறைப் பயிற்சிகளை முறையாகச் செய்வதுதான் சிறந்த முறையாகும்.

வீட்டில் சமைப்பதைவிட இன்றைய இளைய தலைமுறையினர் பாஸ்ட்புட் கடைகளை நாடி ஓடுவதுதான் வேடிக்கையாக இருக்கின்றது. காலப் போக்கில் வீட்டில் சமைத்து உண்பது குறைந்துவிடும் என்று நினைக்கின்றேன்.

மேற்படி துறைகள் தவிர்ந்த வேறு ஏதாவது துறைகளிலும் ஈடுபாடு காட்டி வருகின்றீர்களா?

எனது தங்கையின் மகளுடன் சேர்ந்து ஒரு முன்பள்ளி பாலர் பாடசாலை நடாத்த ஆர்வமாக இருக்கின்றேன். சிறார்களுக்கான கல்வித் துறையில் ஈடுபாடு காட்ட வேண்டும் என்று எண்ணுகின்றேன். எங்கள் வீட்டிலேயே இந்த முயற்சியையும் மேற்கொள்ள முடியும். ஒரே கூரையின் கீழ் எல்லா துறைகளையும் வெவ்வேறாக சிறப்பாக செய்ய முடியும் என்று நினைக்கின்றேன். எல்லாவற்றுக்கும் அல்லாஹ் உதவி செய்ய வேண்டும்.

இறுதியாக இளம் பெண்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப இன்றைய இளம் பெண்கள் ஏதாவது ஒரு தொழில்நுட்ப பாடத்தைக் கற்க வேண்டும். தமது எதிர்கால வாழ்வின் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு கைத்தொழில்களை கற்றுக்கொள்ள வேண்டும். நானும் என் மாணவிகளுக்கு நல்லதொரு தரமான சான்றிதழைக் கொடுக்க வேண்டும் என்று நினைத்து மிகவும் சிரமத்துக்கு மத்தியில் மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சுடன் தொடர்பு கொண்டு அங்கே என் வகுப்புக்களைப் பதிவு செய்து தரமான (T.V.E.C) சான்றிதழை வழங்கிக் கொண்டு வருகின்றேன்.



ஆனால் எங்கள் சமுதாய பிள்ளைகளுக்கு அதன் பெறுமதி தெரிவதில்லை. ஒரு கற்கை நெறியை ஆரம்பித்து, அதை முழுமையாக பூரணப்படுத்துவதில்லை. இடையிலேயே அதனை விட்டுச் சென்று விடுகிறார்கள். எந்த ஒரு துறையையும் பூரணமாக நிறைவு செய்தால்தான் பலனைப் பெற முடியும் என்பதை அவர்கள் உணர்வதில்லை. இவற்றை எல்லாம் நன்கு உணர்ந்து இக்கால இளைய சமுதாயம் மீண்டும் மீண்டும் விழிப்புணர்வு அடைய வேண்டும் என்பதே எனது அவாவாகும்!!!

# ஒரு மரம் பல்கலைக்கழகமானது

மூன்று நாட்களாக
சிந்திய கண்ணீர் நின்றதும்
சிந்தனை தலைதூக்கியது!

வாழ்வை வெறுத்த மனிதமே
வாழ்க்கை இதோ
உன் கண்முன்னே என்றது!

சுற்றி சுற்றிப் பார்த்தேன்
எதுவும் தென்படவில்லை
மீண்டும் சோர்ந்துவிட்டேன்!

உறங்கிக்கொண்டிருந்த
மனதை தட்டி எழுப்பியது
மனசாட்சி
நீ அமர்ந்திருக்கும்
இடத்திலிருந்து
உலகத்தை பார்
உனக்கெதிராக எதாவது
செயல்படுகிறதா என்று!

என் பாதங்களுக்கு அருகே
இருந்த எறும்புகள்
சுறுசுறுப்பாய்
உழைத்துக்கொண்டிருக்க,
பட்டாம்பூச்சிகள் எல்லாம்
மின்னலைவிட வேகமாய்
பறந்துக்கொண்டிருக்க,
எனக்கு நிழலைத் தந்த
கொய்யா மரத்திலிருந்த
ஒரு பழத்தை
அணில் கொஞ்சம் கடிக்க,
பச்சைக்கிளி கொஞ்சம் கடிக்க,
விட்டுச்சென்ற மீதியைத் தின்ன
இன்னொரு பறவை வந்தது!

பதுக்கல் இல்லாத
இந்த வாழ்வைக் கண்டு
பரவசம் கொண்டேன்!

பச்சைப் பாம்பு
ஒரு கொடியில் படுத்துறங்க,
பக்கத்திலே ஒரு ஓணான்
தலைதூக்கி பார்த்துக்கொண்டிருக்க,
நான்கு சிட்டுக் குருவிகள்
அமர்ந்து கதைபேசிக்கொண்டிருந்தன!

சிறிது நேரத்தில்
மேலே வட்டமிட்டுக்கொண்டிருந்த
கழுகைப் பார்த்தவுடன்
எதிரி வந்துவிட்டான் என்று
சண்டைபோட எவையும்
தயாராகவில்லை!

மாறாக
அதனதன் வழியில்
அமைதியாக
விலகிச் சென்றுவிட்டன!

இந்தக் காட்சிகளைக் கண்டபொழுது
ஒரு பல்கலைக்கழகத்தை
நான் கண்டேன்
கற்றேன் வாழ்க்கைக் கல்வியை!!!

எல். தேனுஷா

# இலக்கிய அனுபவ அலசல் 11

(கவிஞர். ஏ. இக்பால்)

பெண்ணியம் FEMINISM என்ற சொல் 1890களிலிருந்தே பாலின சமத்துவக் கோட்பாடுகளையும், பெண்ணுரிமைகளைப் பெறச் செயற்படும் இயக்கங்களையும் குறிப்பதாகத் தெரிகிறது. ஐக்கிய நாடுகள் சபை 1975ஆம் ஆண்டை 'அகில உலகப் பெண்கள் ஆண்டாக' பிரகடனப்படுத்தியது. இப்பிரகடனம் ஏற்கனவே முற்போக்குவாதம் கூறும் பெண்மையின் மேன்மையுடன் இணைந்திருப்பதால் கலாசாரத் தளத்தின் விஸ்தரிப்பும் இலக்கியத் துறையில் பெண்களின் உத்வேகமும் உயர்வதற்கு வாய்ப்பளித்ததெனலாம். இந்நிகழ்வின் தொடர்ச்சியால் படைப்பிலக்கியத் துறையில் பெண்களின் பங்களிப்பு கணிசமான அளவு அதிகரித்தது.

1980க்கு முற்பட்ட பெண் எழுத்தாளர்களும், ஆக்க இலக்கிய கர்த்தாக்களும் அதிகளவு பெண்களது உரிமைகள், உணர்வுகள் பற்றிய ஆக்கங்களை 1980க்குப் பின் படைக்கலாயினர்.

கோகிலா மகேந்திரன், மண்டூர் அசோகா, பாலேஸ்வரி, நிறைமதி ஜாமினி, கெக்கிராவ ஸஹானா, பத்மா சோமகாந்தன், குறமகள், நயீமா (பஷீர்) சித்தீக், ஹஸீனா வஹாப், கவிதா, புர்கான் பீ இப்திகார், சுலைமா ஏ சமி (இக்பால்), நிஸானா ஆப்தீன், இர்பானா ஜப்பார், மரீனா இல்யாஸ், எம்.ஏ.றஹீமா, பாத்திமா ரஜப், பௌஸியா யாஸீன், மிஸ்றுல் மஸீனா, சித்தி றிஜா எகீன், ஸனீரா காலிதீன் போன்றோர் புனைகதைகளினுள்ளே பெண்ணுரிமை பற்றியும் பெண்களை ஒடுக்கும் சூழ்நிலை பற்றியும் கருக்களை நிலைக்க வைத்தவர்கள் எனக் கூறலாம்.

வானொலி மூலம் புர்கான் பீ இப்திகார், மரீனா இல்யாஸ், சில்மியா ஹாதி, நௌஷாத், அஷ்ரப்கான் போன்றோர் பெண்கள் உரிமை பற்றிய கருத்துக்களை உள்ளடக்கிய நாடகங்களை வெளியாக்கினர்.

முற்போக்குச் சிந்தனையே பெண்விடுதலையை முதன் முதல் முன்வைத்தது. "அலன்பேடர்" உடைய "அன்னையின் குரல்" எனும் ஆபிரிக்க நாவல் பெண்மையின் மேன்மையைக் குறித்தெழுந்தது. "மாக்ஸிம் கோக்கி"யின் "தாய்" பெண்ணுரிமையை மேலே தூக்கியது. அமெரிக்காவின் நீக்ரோ கொடுமையை எதிர்க்கும் "ஹவ்வேட்பாஸ்ட்" உடைய நாவல் சினிமாவும் வந்து மக்களுரிமையுடன் பெண்ணின் மேன்மையையும் எடுத்துயர்த்தியது.

முஸ்லிம்களின் சமயம் சார்ந்த செயற்பாடுகளைப் பெண்ணியம் சார்ந்தோர் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதுண்டு. மதவாதியல்லாத பகுத்தறிவுவாதியான பேராசிரியர் காலபொன்சேகா அவர்கள் உலகில் பெண்ணுரிமையை வழங்கிய மகான் முஹம்மதுதான் என இடித்துரைக்கிறார். இஸ்லாமியர் கடைப்பிடிக்கும் "இத்தா" அனுஷ்டிக்கும் முறை, விவாகம் விவாகரத்துப் போன்றவைகளைப் பார்த்து, அவை பெண்களை அடிமைப்படுத்துவதாகச் சிலர் காண்கின்றனர்.

“இத்தா” என்பது WAITING PERIOD காத்திருத்தல்தான். விவாகரத்துச் செய்து கணவனை இழக்கும் பெண் நான்கு மாதம் பத்து நாட்கள் காத்திருத்தல் கட்டாயம். விடுபட்ட கணவனுக்கும் குழந்தை தரிக்கின்றதா? என்பதை அறியும் கால அளவு அது. இந்த இஸ்லாமிய நடைமுறையை இனங்காணச் செய்யும் கதைகள், நாடகங்கள் நிறைய இக்காலம் வந்துள்ளன. விவாகரத்துச் செய்யும் ஆண், பெண்ணுக்கெதிராகக் காரணம் கூற முடியாது. இருவரது விருப்பத்தின் பேரில் அது நடக்கும். ஆனால் பெண் காரணம் கூறலாம். இந்த உரிமை பெண்ணுக்களித்த உயர் அந்தஸ்தெனலாம். இந்தக் கதைக் கருவை வைத்து புனைகதைகள் நிறைய வந்துள்ளன.

அல்குர்ஆனில் ‘அல்கஸஸ்’ என்னும் அத்தியாயத்தில் இருக்கும் மூஸா (அலை) அவர்கள் மத்யன் நகரத்தை அடைந்து பெண் எடுத்த கதையைப் பாருங்கள். ஓர் இறைத் தூதரான நபி மூஸாவுக்கே ஒரு பெண் எடுக்க வேண்டுமெனின் தன்னுழைப்பிலிருந்து பெண்ணுக்காகப் பொருள் அளிக்க வேண்டும். பெண்ணுரிமை இஸ்லாத்தில் மிக வன்மையுடன் இறுகி நிற்பதைக் காணலாம்.

பெண்ணிலைவாதம் பற்றிய சர்ச்சையான கதைகளை எஸ். நஸிருத்தீன், செ. யோகநாதன் எழுதியபோதும், “ஒரு தீபம் தீயாகிறது” நாவலில் ஸனீறா காலிதீன் படிக்காத சகோதரன் வீட்டில் எடுக்கும் காரியங்களுக்கு, படித்த சகோதரி கூறும் ஆலோசனையை ஏற்பதில்லை. “நீ பெண் பிள்ளை உள்ளே போ” எனக் கூறும் அடக்குமுறையை அப்பட்டமாகக் கூறுகின்றார். எழுதுகின்றார். இளங்கீரனின் “அவனுக்கு ஒரு வேலை வேண்டும்”, “நீதியே நீ கேள்” நாவல்கள் பெண்களுக்குள்ள உரிமையை வெளிச்சம் காட்டுகின்றன.

கோகிலா மகேந்திரனின் “துயிலும் ஒரு நாள் கலையும்” எனும் நாவல் இலக்கிய உலகை ஒரு கலக்குக் கலக்கியது. ஆணாதிக்கச் சமூகம் இதனை ஏற்க மறுத்ததை நூலின் வெளியீட்டு விழாவில் காணக்கூடியதாக இருந்தது. முற்போக்கு வாதத்தை ஆரம்பத்தில் எதிர்த்துத் தள்ளிய ‘செங்கையாளியன்’ மிகக் கடுமையாக இந்த நாவலை விமர்சனம் செய்தார். கலாநிதி நா. சுப்பிரமணியம் இனத்துவப் பார்வையில் நோக்கினார். ஆனால் கோகிலா மகேந்திரன் அந்நாவல் முற்போக்கு சிந்தனைக்குட்பட்டதே, பெண்ணிலைவாதத்தின் முக்கிய கருத்துக்கள் அமைந்திருப்பதை எடுத்துக்காட்டி விளாசினார். பதில் கூற யாரும் முன்வரவில்லை. தற்கால மனப்பக்குவம் பெண்கள் நசுக்கப்படும் சந்தர்ப்பங்களை உற்று நோக்கி ஆண் பெண் புரிந்துணர்வை ஏற்படுத்துவதைக் காண முடிகின்றதல்லவா? இந்த வளர்ச்சியின் முடிவுதான் 1970களின் பிற்பகுதியிலிருந்து இன்றுவரை வளர்ந்து நிற்பதைக் காணலாம். இதன் பலாபலன்தான் அன்றைய பாராளுமன்றத்தில் இரு முஸ்லிம் பெண் அங்கத்தவர்களான ‘அம்ஜானத்தும்மா, பேரியல் அஷ்ரப்’ தெரியப்பட்டு உள்ளனார்கள். இம்முன்னேற்றத்திற்கு இலக்கியப் பெண்ணிலை ஆக்க கர்த்தாக்களே காரணம் எனின் மிகையல்ல. இந்த வழியில் பெண்ணிலைச் சமத்துவத்தை நிலை நிறுத்தும் பணிகளை இலக்கிய உலகம் செய்வதற்கான உறுதியில் நிலை நிற்றல் அவசியம்!!!

(இன்னும் வரும்)

# ஏவாளின் புன்னகை

உயிரை அவள் விழிகளில்
வைத்துவிட்டு
அவள் மடியில் உறங்கினேன்..
நிம்மதியான ஒரு தூக்கம்
எழ நினைக்காத ஒரு சுகந்தம்
இதுவரை நான் தூக்கத்தில்
அனுபவித்தறியாத ஆனந்தம்!

கனவில்
நான் ஏதேன் தோட்டத்து
மாதுளங் கனிகளை சுவைத்தேன்..
பேரீச்சம்பழ மதுரசம் குடித்தேன்!

ஏதேன் நதிகளில்
மீன்களோடு பேசியவாறு
குளித்தேன்..
வெண்கொக்குகள்
என் முதுகை தேய்த்துவிட்டன!

ஏதேன் பாம்புகள்
என்னை நெருங்கும் நேரத்தில்
அவள் என்னை எழுப்பினாள்..
கண்களை மெல்லத் திறந்தேன்..
என் உயிர்
அவள் விழிகளுக்குள்
ஏதேன் பாம்புகளுடன்
களிநடம் புரியக் கண்டேன்!

அவளைப் பார்த்தேன்
ஏவாளாய் புன்னகைத்தாள்!!!

● ஈழக்கவி

# பாசம்

வாய் தவறி எதேச்சையாய்
விழுந்த உன் பாச வார்த்தை
காய்ந்திருந்த இதயத்தில்
மழை தூறிப் போயிற்று!

வெயிலிலும் உன்னுடனே
வெளியே நான் வருகையில்
துயிலெழுந்த காலைபோல்
உற்சாகம் பெறுகின்றேன்!

பார்வைகள் பிடிக்கிறது
புன்னகையும் இனிக்கிறது
என்னுடன் நீ நடக்கையில்
சுவர்க்கமே கிடைக்கிறது!

தேவதையாய் இருந்தவளே
தேன் வதையாய் இருப்பவளே
ஏனிதை நீ மறைக்கின்றாய்
என்னிடம் பொய் உரைக்கின்றாய்?

அன்பை நீ அள்ளிப்போட்டு
ஆசையாக சமைத்த உணவு
தொண்டை வழி இறங்குகையில்
இதயம்தான் நிறைகிறது!

வாழ்க்கை எனும் என் பாதை
வரும் நொடியே முடிந்திடலாம்..
உன்னிடம் நான் கொண்ட பாசம்
உயிர் போயினும் அழியாது!!!

● குறிஞ்சி நிலா

# ஓதிய தண்ணீர்

## சிறுகதை

● மருதூர் ஜமால்தீன்

ரஹீமின் மனம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. தன் ஆற்றல், அறிவு, எழுத்துத் துறைக்கு மட்டுமல்லாமல், தனது நல்ல முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருந்த அன்புத் தங்கை மஸாக்கீனின் திடீர் மறைவு அவனை மிகவும் பாதித்திருந்தது. தனது உடன் பிறந்த தங்கைக்கா இப்படியொரு மரணம் கிடைக்க வேண்டும்? பல புதிய எதிர்பார்ப்புகளோடும், கனவுகளோடும் வாழ்வதற்கு ஆசைப்பட்ட அன்புத் தங்கையை அல்லாஹ் பீஸபீல் அந்தஸ்தில் அழைத்துக்கொண்டது அந்த ஆத்மாவை ஆறுதல் படுத்துவதற்கா? என்று எண்ணினான். என்றாலும் அன்புத் தங்கையின் இழப்பினை அவனாலும், அன்புத் தாயாலும் மறக்க முடியாமல் இருக்கின்றது.

வீட்டுப் பிரச்சினைகள் எதுவாகயிருந்தாலும் பெற்றோரின் சொல் பேணி "ரஹீம் நானாவிடமும் ஒரு வார்த்தை கேட்டுவிடுவோம் உம்மா" என்று தாயாரைப் பணிந்து நானாவுக்காக உம்மாவிடம் எதற்கும் சிபார்சு செய்யும் அன்புத் தங்கை போன்று இனி யார் கிடைப்பார்கள்? என்ற சிந்தனையில் தனது கடந்த வாழ்வின் கசந்த பகுதிகளைப் புரட்டினான்.

வறுமை என்ற ஓடத்தைக் கரைசேர்க்க முடியாமல் தவித்த ஏழைக் குடும்பம் அது. தந்தை நிரந்தர நோயாளி. தாயோ தன்னால் இயன்ற மட்டும் சிறிய கைத்தொழில்களைச் செய்து தன் பிள்ளைகளை உண்மை, நேர்மை, ஒழுக்கத்துடன் கல்வியறிவூட்டி வளர்த்து வந்தாலும் காலத்தின் உதயங்களின் விலைவாசியேற்றத்திற்கு முன்னால் ஈடுகொடுக்க முடியாமல் தவித்து தாயும் தனது பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக வெளிநாடு சென்றுழைக்கத் தீர்மானித்து அதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டாள்.

"உம்மா நீங்க வெளிநாட்டுக்கு போக வேண்டாம்மா... எங்களுக்கு நீங்க மட்டுமிருந்தாப் போதும்மா..." என்று அடிக்கடி கூறும் தங்கையிடம் மழை வந்தால் சிறகடிக்கும் வீட்டின் கூரையைக் காட்டி,

"இதெப்பாரு மகள் உனக்கொரு வீடாவது நான் கட்ட வேணாமா? ஒன்ட நல்ல வாழ்வுக்குத்தானே நான் போகப் போறன்" என்று உம்மா சமாதானம் கூறிவிடுவார்.

வெளிநாடு செல்வதற்கு முன் மகளுக்குத் திருமணம் செய்துகொடுத்து மகிழ்வடைய வேண்டும் என்று எண்ணியது குடும்பம். அயலூர் உறவில் பண்பான ஒரு மணமகனைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து வைக்கப்பட்டு

இரு வருடங்களில் வீட்டின் அனைத்து வேலைகளையும் முடித்துத் தருவதாக வாக்களித்துவிட்டு தாயார் வெளிநாடு சென்றார்.

உம்மா வரும்வரை ரஹீம்தான் தாயாகவும், சகோதரனாகவும் தங்கைக்கு உறுதுணையாக இருந்தான். இந்நிலையில் தங்கை கர்ப்பமடைந்து பேறு காலமும் நெருங்கியபோது தங்கை, ரஹீம் நானாவை அழைத்து

“நானா எனக்கு ஆண் குழந்தை பிறக்குமென்று நம்பிக்கையிருக்கிறது. பிள்ளை பிறந்தா நீங்கதான் பெயர் வைக்கணும்” என்று அடிக்கடி கூறுவாள்.

“தங்கச்சி நீ ஏன் இப்படி அடிக்கடி கதைக்காய். நாம எல்லோரும் சந்தோசமாத் தானே பெயர் வைக்கப்போறம்”

“இல்ல நானா ஒருவேள நான் மௌத்தானா?”

“தங்கச்சி உனக்கென்ன பைத்தியமா? தேவல்லாத கதையெல்லாம் கதைக்காம சும்மா இரி பார்ப்பம்” என்பான் ரஹீம். என்றாலும் தங்கையின் பேச்சுக்களால் அவனது மனதுக்குள் ஒருவித அச்சமும், சந்தேகமும் நிலவியதை அவன் யாரிடமும் காட்டிக்கொள்ளவில்லை.

இதற்கிடையில் மஸாக்கினின் கணவன் இஸ்மாயிலும் தனக்கு குழந்தை கிடைக்கப்போகும் மகிழ்ச்சியில் பிள்ளைக்குரிய பொருட்களை வேண்டுவதும், உடைகளைத் தயார் செய்வதுமாக தனது கவனத்தைச் செலுத்தினார். மனைவிக்கு எவ்வித வேதனையோ ஆபத்தோ ஏற்பட்டுவிடக் கூடாது என்று மனைவியை அன்பாகக் கவனிக்கவும் தவறவில்லை.

ஒருநாள் மாலை நேரம் தனது தந்தையின் அவசர அறிவித்தலால் அவனது அடிவயிற்றில் என்னவோ செய்தது.

“மகன் புள்ளட நெலம சரியில்ல. ஒரு வாகனமெடுத்து வந்து நீங்களும் மச்சானும் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போங்க” என்று துரிதப்படுத்தினார்.

“எனக்கு வார்ட்டுல இருக்க ஏலா வாப்பா. நான் வீட்டிலயே இருக்கன். எனக்கு பயமா இரிக்கி” என்றாள் தங்கை.

“என்னம்மா நீ படிச்ச புள்ளதானே. இப்படியெல்லாம் கதைக்கலாமா.. நாங்க எல்லோரும் இரிக்கம். அல்லாஹ் துணையால ஒனக்கு ஒண்டுமாகா மகள்” என்ற வாப்பாவின் வாழ்த்துக்களுடன் வைத்தியசாலைக்கு புறப்பட்டாள்.

வார்ட்டில் எட்மிட் செய்ததும் “இன்றிரவு பிள்ளை பிறக்கும்” என்றார் வைத்தியர். தனது மூத்தம்மாவைத் துணைக்கு வைத்துவிட்டு இருவருக்கும் தேவையான பொருட்களைக் கொடுத்துவிட்டு ரஹீம் தங்கையிடம் “நாங்க போயிட்டு காலையில வாரம்மா” என்றான்.

"நானா எனக்கிப் பயமா இருக்கி. கொஞ்சம் தண்ணி ஓதித் தாங்க நானா" என்றாள்.

தங்கையின் முகத்தில் தெரிந்த பயத்தைவிட தனது மனதில் எழுந்த பயம் இரவில் எவருமற்ற இடத்தில் நடுக்காட்டில் தனியாக நிற்பது போன்ற பிரமை அவனுக்கு. விழியில் முட்டிய நீரைத் துடைத்துக்கொண்டு கலங்கி நின்ற அவனிடம், தானே வருத்தத்துடன் மெதுவாக அடியெடுத்து நடந்துவந்து தண்ணீர்க் குவளையுடன் நின்றாள் தங்கை.

நீரைப் பெற்றதும் தனக்குத் தெரிந்த சூறாக்களை ஓதி தங்கையைக் கீழே குந்தியிருக்க வைத்து முகத்தில் தெளித்து ஓதிய தண்ணீரை குடிக்கவும் கொடுத்தான். மனநிறைவுடன் அதனைச் செய்து முடித்து தங்கையிடம் "போயிட்டு காலையில நேரத்தோட வாரன் தங்கச்சி" என்று கூறியவனை,

"போயிட்டு வாங்க நானா" என்று ஏக்கத்துடன் பார்த்தாள். அப்படிப் பார்த்தவளை விட்டுப்பிரிய மனமில்லாமல் ரஹீம் தங்கையின் கணவனுடன் வீடுவந்து சேர்ந்தான்.

அன்றிரவு நடுநிசியில் பேறுகால வருத்தம் ஆரம்பித்ததும் துணையாக இருந்த மூத்தம்மா அங்கு பொறுப்பாக இருந்த தாதியிடம் சென்று பிள்ளையின் வருத்தம் பற்றிக் கூறினார்.

"பேசாமல் போ அம்மா. அந்த வருத்தம் அப்படித்தான். நாங்க பாத்துக்குவம். ஒன்ட வேலையப் பாரு" என்று தாதி சினந்தாள்.

மஸாக்கீன் படும் அவஸ்தையை வைத்தியரிடம் அறிவிக்கும்படியாவது பலமுறை அந்த தாதியிடம் கூறியும் அவள் உதவிட முன்வரவில்லை. இறுதியாகவும் மூத்தம்மா முயற்சித்தாள்.

"அம்மா அந்தப் பிள்ளைட பரிதாபம் பார்க்க முடியல்ல. நீங்க வந்து ஊசி ஏதாவது போடுங்கம்மா. இல்லாட்டி டொக்டருக்காவது அறிவிங்கம்மா" என்றாள் மூத்தம்மா.

"போடி கிழவி உனக்குச் சொன்னது விளங்கல்லியா. இதற்கு மேல வந்தா மூத்த மனிசியெண்டும் பார்க்கமாட்டன்" என்றாள். ஆம் அந்தத் தாதி பண்பற்று சீறும்புலி என்பது அந்த வார்ட்டில் பலரும் அறிந்த உண்மையென்பதால் அவளை எதிர்த்து நிற்கும் சக்தியற்றவர்களாய், கூட இருக்கும் கர்ப்பிணித் தாய்மாரும் உதவி செய்வதற்கு அஞ்சினர்.

மூத்தம்மாவின் கரங்களைப் பிடித்துப் பதறியே அவள் அதிகாலையில் ஆண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்தாள். குழந்தையைப் பார்த்த திருப்தியில் மஸாக்கீன் நிரந்தரமாகக் கண்களை மூடினாள். நிலைமை மோசமடைந்ததைக் கண்ட தாதியும் உடனே டாக்டருக்கு அறிவித்து நல்ல பிள்ளை போன்று நடந்துகொண்டாள்.

நித்திரையின்றி இரவெல்லாம் பயங்கரக் கனவுடன் போராடிய ரஹீம் அதிகாலையில் தங்கையின் கணவனுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றதும் தங்கை இவ்வுலகை விட்டுப் பிரிந்ததை அறிந்து துடித்துப் போனான். அவன் மனதில் கட்டிவைத்த ஆசைக் கனவு மாளிகை உடைந்து சிதறியது.

அந்தச் சம்பவத்தின் பின்னர் டாக்டர் வந்து அந்தத் தாதிக்கு ஏசியதும் சில தினங்களின் பின் இரவில் முகமூடியணிந்து வந்து சமூகப்பற்றுள்ள இளைஞர்கள் ஆஸ்பத்திரியில் புகுந்து சம்பவத்துக்குப் பொறுப்பான தாதியை நையப்புடைந்ததும், அதன் பின் தாதி இடமாற்றம் செய்யப்பட்டதும் சம்பவங்களாக மறைந்து போயின. இறைநாட்டம் எதுவென்றாலும் ஆபத்து வேளையில் முதலுதவி செய்திட மறுக்கும் மனநோயுள்ள மனிதர் மனித நாமத்தைவிட்டும் நீக்கப்படக்கூடியவராகும். ஆனாலும் ரஹீம் தனது அன்புத் தங்கைக்காக ஓதிய தண்ணீர் அவன் மனதை இன்னும் என்னவோ செய்து கொண்டிருப்பது அவன் மட்டுமே அறிந்த உண்மை!!!

## வாசகர் கவனத்திற்கு

சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள். அது பூங்காவனம் சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதையும், கிடைப்பதையும் உறுதி செய்யும். சந்தாதாரராக இணைந்து கொள்பவர்கள் ஆகக் குறைந்தது 600/= ரூபாவை சந்தாவாக செலுத்தவும். பக்கச்சார்பற்ற முறையில் எழுதப்பட்ட, தெளிவான கையெழுத்தில் அமைந்த, இதுவரை பிரசுரமாகாத (சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் A4 தாளில் 03 பக்கங்களுக்குள்) ஆக்கங்களையே பூங்காவனம் எதிர்பார்க்கிறது. பூங்காவனம் இதழில் விளம்பரங்களைப் பிரசுரிக்க மற்றும் கொடுப்பனவுகள், சந்தா, விற்பனை முகவர்களின் தொடர்புகள் ஆகியவற்றுக்கு 077 5009 222 என்ற தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்!

- ஆசிரியர்

"பூங்காவனம்" கிடைக்குமிடங்கள்

பூபாலசிங்கம் புத்தகசாலை கொழும்பு - 06
பூங்காவனம் பதிப்பகம் - கல்கிசை

ப்ரியமான வாசகர்களே!
உங்களால் இயன்ற அன்பளிப்புக்களை வழங்குவதன் மூலம் 'பூங்காவனம்' சஞ்சிகையின் தொடர் வளர்ச்சிக்கு உதவுங்கள்!

# தயங்காமல் நீ முயன்றால்

இழந்துபோனதற்காய்
இடிந்து போகாதே!
விழுந்து போனதற்காய்
விரக்தி கொள்ளாதே!

காலம் பதில்சொல்லுமென்று
காத்திருக்காதே!
கோலமாய் போகுமட்டும்
பொறுமை கொள்ளாதே!

சிரித்தாலும்
பழிசொல்லும் - நீ
முறைத்தாலும்
பலிசொல்லும்!

தலைகீழாய் மாற்றிவைக்கும்
தடுக்காமல் நீயிருந்தால்
உலகம்
வலைவிரித்து காத்திருக்கும்
விழிக்காமல் நீயிருந்தால்!

கையில் எடுத்துக்கொள்
உன்னுடைய காலந்தனை..
கால்களுக்கு சொல்லிக்கொடு
உனதான பாதைகளை!

தடைகளை கடந்துபோ
தடுப்புக்களை உடைத்தெறி..
தன்மானக் கவசமணிந்து
தனித்துவமான பயணத்தைக்கொள்!

கண்ணீர் வழிகளை
கண்காணித் தறி..
கண்களை கசக்குமுன்
கனவுகளை பகுத்தறி!

ஏணிகளை கண்டவுடன்
ஏறிடத் துணியாதே..
ஏற்றது உனக்கென்றால்
எள்ளளவும் தயங்காதே!

ஏனிந்த நிந்தையென்று
எப்போதும் நினையாதே..
தானாயழிந்த சிந்தைதனை
வீணாய்ப் போகவிடாதே!

உனக்குள்ளே எப்போதும்
உயிருள்ள கலையுண்டு..
தயங்காமல் நீமுயன்றால்
தரணியிலில்லை உனைவெல்ல..

இழந்து போனதற்காய்
இடிந்து போகாதே!!!

த. எலிசபெத் - தலவாக்கலை

# உறவின் உச்சநிலை உணர்த்தும் பாலும் நீரும்

● நுணாவிலூர் கா. விசயரத்தினம் - இலண்டன்

ஆவின் பால் பசுவின் மடியிலிருந்து கன்றுக்குட்டிக்காகச் சுரந்து உணவாகும் வெண்மைத் திரவமாகும். 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்', 'பாலுக்கு மிஞ்சிய சுவையுமில்லை, பல்லக்குக்கு மிஞ்சிய சொகுசும் இல்லை', 'பாலைப் பார்த்துப் பசுவைக் கொள்ளு, தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்ளு' இவைகள் யாவும் பாலின் சிறப்பை எடுத்துக் கூறும் பழமொழிகளே. மென்மையான மொழிகளைப் பேசுகிற இவளுடைய தூய பற்களில் ஊறிய நீர், பாலுடன் தேனைக் கலந்தாற் போன்றதாகும் என்று காதற் சிறப்புரையில் தேன் கலந்த பாலை அவள் பல்லில் ஊறும் நீருக்கு ஒப்பிடுகின்றார் பொய்யா மொழித் திருவள்ளுவர்.

'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்' - (குறள். 1121)

இன்னும் 'பாலும் தெளிதேனும்', 'தேனும் பாலும் வழிந்தோடும் வளம்', 'பாலோடு அளாவிய நீர் பாலாகும்', 'பாலால் கழீஇப் பலநாள் உணக்கினும்', 'பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட', 'பாலொடு தேனும் பழத்துள் இரதமும்' போன்ற சொற்பதங்கள் பாலின் பெருமையைப் பேசும் பாங்கினைத் தமிழ் இலக்கியங்களிற் காண்கின்றோம்.

'நீர்' என்னும் பதத்துக்கு மழைநீர், தண்ணீர், கண்ணீர், வியர்வைநீர், உமிழ்நீர், சிறுநீர், ஊனீர், கழுவுநீர், கழிவுநீர், கழுநீர், நீர்நிலை, ஆறு, கடல், ஏரி போன்ற கருத்துகளைக் கூறலாம். நீரில் மழை நீர்தான் மூத்தது. மழை நீரிலிருந்து மற்றைய நீர் யாவும் பிறக்கின்றன. மேலும், 'நீரும் நிழலது இனிதே', 'நீர் இன்றி', 'நீரளவே ஆகுமாம் நீராம்பல்', 'நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி', 'பூசை செய்வதற்குப் பூவும் நீரும் போதும்', 'புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு', 'வீங்கு நீர்', 'முந்நீர்', 'நீர்நீத்த', 'நீரகத் தின்பம்', 'நீரிடை மண்ணின்', 'நீரில் எழுத்து', 'நீரில் குளிரும்', 'நீரும் நிலனும் விசும்பும்', 'நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி' என்று சங்க இலக்கியங்கள் நிறையப் பேசுகின்றன.

'உறவு' என்ற சொல்லுக்கு சுற்றம், நட்பு, விருப்பம், சொந்தம், தொடர்பு, தோழமை, உறவு முறை, உறவினர் ஆகிய கருத்துகளைக் கூறலாம். மேலே பால் பருகினோம் நீர் அருந்தினோம். பால், நீர், உறவு காண்பதுதான் இக் கட்டுரையின் நோக்கு.

ஆவின் பாலும் இயற்கை நீரும் அன்றிலிருந்து இன்றும் இணைபிரியா நண்பர்களாய், நெருங்கிய உறவினர்களாய், ஆசை மிகு அன்புச் சகோதரராய்,

ஈருடலும் ஓர் உயிருமாய், காதலர்களாய் வாழ்ந்து வருகின்றன. இவைகள் தொன்மை வாய்ந்த சீரிய வாழ்வைக் கண்டவை. மனிதனுக்கு ஊட்டச் சத்தைக் கொடுத்து அவன் வாழ்வை மேம்படுத்துவதே இவைகளின் மேலாய நோக்கு. கோயிற் பூசைகளிலும் முன்னிடம் இவைகளுக்கே. இவைகளின்றிப் பூசைகள் நடப்பதில்லை. தமக்கென வாழாப் பிறர்க்கென வாழ்பவை.

இவற்றின் தன்மைகளையும் தரங்களையும் நன்கறியாப் பேதைப் பெண் அவள். ஆனால், அவளோ ஓர் ஆரணங்கு. காதல் அவள் கடைக்கண் கதவைத் தட்டியது. காதல் கொண்டாள். கட்டிளங் காளை ஒருவனைக் கண்டாள். கட்டுண்டாள். படர் கொடியானாள். ஆனால் அவள் வீட்டில் எதிரலைகள் தோன்றிப் பூகம்பம் கிளம்பிச் சுவாலையாய் எரியத் தொடங்கிவிட்டது. இதனால் அவள் மனம் கலங்கவில்லை. மனத்திடத்துடன் அவள் அவனுடன் சேர்ந்து உடன்போக்கிற் சென்று திருமணமும் முடிந்தது. தனிக் குடித்தனமும் தொடங்கியது.

தலைவனைக் களிப்படையச் செய்வதுதான் அவள் புரியும் விந்தை. பல்சுவை உணவுகள் தயாரிப்பாள். பரிமாறுவாள். அன்று தன் கைப்படப் பசும் பாலை முறுகக் காய்ச்சித் தலைவனுக்குக் கொடுக்க விரும்பினாள். நெருப்பை வளர்த்துப் பாலை ஊற்றி அடுப்பில் வைத்துக் காய்ச்சினாள். குய்ப்புகை கண்ணில் புகுந்ததையும், தன் பட்டாடை நலங்குவதையும் அவள் பொருட்படுத்தவேயில்லை. பாலைக் காய்ச்சிக்கொண்டேயிருந்தாள். சூடு ஏற ஏற பாலிலுள்ள நீர் ஆவியாக மாறிப் பாலிலிருந்து பிரிந்து மேலே போய்க் கொண்டிருந்தது. தனது நண்பனாய் ஒன்றாயிருந்த நீர் தன்னை விட்டுப் பிரிந்து போய்க்கொண்டிருக்கின்றானே என்று மிகவும் கவலையடைந்தது பால். ஆனால், அப் பெண்ணோ பால் முறுகக் காய்ச்சுப் படவில்லையே என்று மீண்டும் மீண்டும் சுவாலையாக நெருப்பை எரித்தாள். நீர் மேலும் மேலும் ஆவியாகப் பிரிந்து சென்று கொண்டிருந்தது. "என் நண்பனான நீர் இல்லாமல் இனி எனக்கென்ன வாழ்வு?" என்று பால் நினைத்து ஒரு முடிவுக்கு வந்தது.

"நண்பன் என்னை விட்டுப் பிரிகின்றான். அவனின்றி என்னால் வாழ முடியாது. ஏன் வாழ்வான்? யாருக்காக வாழவேண்டும்? என்னை இக் கதிக்காக்கிய இப் பெண்ணுக்கும் இனி நான் உதவப் போவதில்லை. என் உயிர் மாய்ப்பேன். இ..து உறுதி" என்று கூறிக் கொண்டு நெருப்பில் பாயப் பொங்கி எழுந்தது பால்.

இதைக் கண்ணுற்ற அப் பெண் பால் வீணாகிப் போய் விடுமே என்றெண்ணி கொஞ்ச நீரை எடுத்துப் பொங்கியெழுந்த பாலில் ஊற்றினாள். பொங்கியெழுந்த பால் சிரித்த வண்ணம் அமைதி கொண்டு அடங்கிவிட்டது. தன் நண்பனான நீர் மீண்டும் வந்து விட்டானே என்று சந்தோசப்பட்டது பால். பாலும் நீரும் மீண்டும் உறவாகிவிட்டனர். பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமோ?

தலைவனுக்குப் பாலைக் கொடுத்தாள். அவனும் பாலைப் பருகி, 'இனிது! இனிது!' என்று அவளைப் பாராட்டவே அகத்தே நிறைந்த மகிழ்ச்சி புறத்தே இருவருக்கும் புன்முறுவலாய் முகத்தில் பூத்து விளங்கியது. நினைத்ததை முடித்துவிட்ட பெருமையில் அவள் பூரித்து நின்றாள். இதைக் கண்ணுற்று நோக்க ஆங்கே நற்றாயோ அல்லது செவிலித்தாயோ இருக்கவில்லை.

நடந்தேறிய நிகழ்வுகள் யாவும் தலைவியின் தலைக் கணினியில் ஓட, பால் நீர் உறவின் முழு அர்த்தத்தையும் அவள் நன்கு புரிந்து கொண்டாள். தன் வாழ்க்கைக்கும் இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டாள்!!!

# அற்புத நீரூற்றுகள்

அகிலம் வாழும்
காலமெல்லாம்
மெல்ல வந்துபோகும்
வருடத்தில்
ஒரு நாள்
உங்கள் தினமாமே!

காலத்தால் காலாவதியாகாத
கலைப் பொக்கிஷமாய்
நிலைமாறும் உலகில்
மலை போன்ற
உங்கள் பணிக்கு
ஏது ஓய்வு?

பனிக்கட்டி போல் உருகி
மனித குலத்தின்
கல்வித்தாகம் தீர்க்கும்
அற்புத நீரூற்றல்லவா நீங்கள்?

குவலயத்தில்
மாதா பிதாவுக்கு அடுத்து
யோசிக்காமல் நேசிக்கும்
மகத்தான மாணிக்கம்
நீங்களல்லவா?

பட்டப்படிப்பு முடித்து
சட்டத்துறை
மருத்துவத்துறை
இன்னும் பல என
கொடிகட்டிப் பறக்கின்ற
புத்திஜீவிகளை
தோற்றுவித்தவர்களல்லவா
நீங்கள்?

எள்ளளவும்
கள்ளங் கபடம் இல்லாத
உங்களின் நல்ல உள்ளம்
அகிலம் வாழும்
காலம் எல்லாம்
நலமாய் வாழ
வாழ்த்துகிறோம்!!!

கவிப்புயல் எச்.எம். சுஜப்
நுரைச்சோலை

# குப்பைத்தொட்டிக் குழந்தையின் குமுறல்

அன்பென்றால் அம்மாவாம்
உலகம் போற்றும்
உன்னத வாக்கு
எனக்கது பொய் வாக்கு..
உணர்ந்தால்தானே
உரைக்க முடியும் நான்தான்
குப்பைத்தொட்டி
குழந்தையாச்சே..

தடுக்கி விழுந்தால்
தாங்கிப் பிடித்து
தட்டிக்கொடுக்க வேண்டியவள்
விட்டுவிட்டாள் வீதியிலே..
எட்டாக்கனியான அன்னையன்பால்
பட்டுப்போன என் உணர்வுகளில்
ஊமையின் ஓலங்களாய்
எவரும் அறியாமல்
எத்தனையோ வலிகள்..

விலையில்லா தாய்ப்பாலை
எனக்கு விரயமாக்கக்கூடாதென
நினைத்திருப்பாளோ?

தொப்புள் கொடி அறுத்தவுடன்
உறவும் அறுந்ததென
உணர்ந்திருப்பாளோ?

தாயும் சேயுமாயினும்
வாயும் வயிறும்
வேறென எண்ணியிருப்பாளோ?
என்றெல்லாம்
ஏராளம் வினாக்கள் என்னுள்..

சுடுமொழி
சுத்தமாய் தெரியாதாம்
மடிமீது தலை சாய்ப்பித்து
பரிவாய் பேசி
பாசத்தோடு
தலை கோதிவிடுவாளாம் தாய்
அனுபவித்ததில்லையே
அந்த வரம்..
ஏனிந்த சாபம்
என் வாழ்வில்?

கருணையில் அவள்
கல்லென்றால்
கர்ப்பத்தில் எனைக்
கரைத்திருக்கலாமே?

கருவறையில் சுமந்து
தெரு வரையில்
விட்டுவிட்டாளே..
அவள் இதய அறையில்
ஈரமில்லையா???

● வவுனியா சுகந்தினி

# மனித நேயம்

## சிறுகதை

● எஸ்.ஆர். பாலசந்திரன்

அன்று சனிக் கிழமை. நேரம் பகல் 12.30 மணி. சிவக்குமாரன் தம்பதிகள் மதிய உணவு சாப்பிட அமர்ந்தனர். ஓரளவிற்கு வசதியான குடும்பம். ஒரு மகன். சிவதர்மன் வயது 20. மகள் சாந்தினி வயது 22. மகள் தனது தோழிகளான ரிப்கா, செல்வி, மேரி, பிரியதர்சனி ஆகியவர்களுடன் நுவரெலியாவிற்குப் போய்விட்டாள். மகனும் திரைப்படம் பார்க்கப் போய்விட்டான். வரும்போது சாப்பிட்டுவிட்டு வருவதாகக் கூறிவிட்டான். ஆரோக்கியமான வீட்டுச் சாப்பாட்டைவிட உடல் நலத்திற்கு தீங்கான கொழுப்பு உணவுகள் இக்கால இளைஞர்களுக்குப் பிடிக்கும்.

சோற்றில் கை வைக்கும் போது வாசலில் ‘அம்மா தாயே! பிச்சை போடுங்க அம்மா!’ என்ற குரல் கேட்டது. மனைவி வசந்தி சிறிது எரிச்சல் அடைந்தாள். கையில் ஐந்து ரூபாவோடு வாசலுக்கு விரைந்தாள். ஒரு 35 வயது மதிக்கத்தக்க பிச்சைக்காரி. ஒரு பாலகனோடு நின்றிருந்தாள். காசைக் கை நீட்டி வாங்கியவள்,

‘தாயே! பசிக்கு ஏதாவது கொடம்மா... பழஞ் சோறு என்றாலும் பரவாயில்லை’ என்றாள்.

வசந்திக்கு கோபம் தலைக்கேறியது. ‘இதோ பார்! காசு தந்துவிட்டேன். உங்களுடைய புத்தி போகாதே. முதல்ல காசு.. பிறகு சாப்பாடு.. பிறகு உடுப்பு.. இப்படியே தொடர வேண்டியது தானே. நாம் பழஞ்சோறு வைத்திருப்பதில்லை’ வார்த்தைகள் படபடவென வந்து விழுந்தன.

‘தாயே! எனக்கு வேண்டாம். எனது மகன் காலையில் இருந்து பட்டினி. சாப்பாடு வாங்க காசும் இல்லை தாயே! ஐந்து ரூபாவுக்கு என்ன தாயே நான் வாங்க முடியும்?’

இது நியாயமான காரணம். ஆனால் வசந்தி எரிந்து விழுந்தாள்.

‘அப்போ ஐம்பது ரூபா வேண்டுமா? எங்களுடைய வீடு மட்டும்தான் கிடைத்ததோ? இந்தத் தெருவில் எத்தனை வீடுகள் இருக்கின்றன? போய்க்

கேள்' வாசல் கதவை அறைந்து சாத்திவிட்டு வந்தாள். கணவன் சிவகுமாரன் ஒன்றும் பேசவில்லை. தலையை மட்டும் ஆமோதித்து ஆட்டினான். பெரும்பாலான கணவர்கள் தலையாட்டிப் பொம்மைகள் தானே. கோவில் மாடு மாதிரி தலை காட்டாவிட்டால் மனைவி மொழியும் அர்ச்சனைகளைத் தாங்க முடியாதே. அடக் கடவுளே! ஆண் உலகத்தை நீ காப்பாற்றக்கூடாதா? மனதிற்குள் பிரார்த்தித்துவிட்டு உணவைச் சாப்பிட ஆரம்பித்தார் சிவகுமாரன். உணவைச் சாப்பிட்ட பின் ஓய்வெடுக்க நாற்காலியில் அமர்ந்தார். மகள் இன்னும் வரவில்லையே என்ற கவலை அவரது மனதை வாட்டியது.

'ஹெட்டனில் மண் சரிவு ஏற்பட்டதால் நுவரெலியாவில் இருந்து வரும் பஸ்கள் வரமுடியாமல் இருக்கிறன' என்ற அவசர செய்தி டீவியில் வந்தது. ஆனால் ஒரு பஸ்கூட ஆபத்தில் மாட்டிக்கொள்ளவில்லை என்ற செய்தி சிவகுமாரன் தம்பதிகளுக்கு சிறிது ஆறுதல் அளித்தது.

இரவு எட்டு மணியளவில் மகள் வந்து சேர்ந்தாள். முகத்தில் ஒரே களைப்பு. அவசரமாகக் குளித்துவிட்டு வந்தவளுக்கு சூடாக உணவு பரிமாறப்பட்டது. சிவகுமாரன் தம்பதிகள் இரவு உணவைச் சாப்பிட்டனர். மகள் பகல் உணவையே விரும்பிச் சாப்பிட்டாள். சிறிது நேரத்தில் சிவகுமாரன்,

'சாப்பாடு, தண்ணீர் எல்லாம் ஒழுங்காகக் கிடைத்ததா? ஏதாவது ஹோட்டல் கிடைத்ததா? குடிக்க ஃபெண்டா, சோடா கிடைத்ததா?' என்ற கேள்விகள் அடுக்காய் பறந்தன. மகள் சொன்னாள்.

'அப்பா! எமது பஸ் நின்ற இடம் வெறும் தோட்டம். ஹோட்டல் ஒன்றும் கிடையாது. நாம் எல்லோரும் பசித்துப் போனோம். குடிக்க ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் கிடைக்கவில்லை. அப்போது தோட்டப் பகுதியைச் சேர்ந்த ஆண் பெண் கும்பல் ஒன்று எம்மிடம் வந்தது. நிறையத் தண்ணீர் போத்தல்கள் கொண்டுவந்து தந்தனர். 'நிறைய நேரம் செல்லும் எல்லோரும் எங்களோடு வாங்க வாங்க' என்று கூட்டிச் சென்று நன்கு உபசரித்தனர்.

எங்களை ஒவ்வொரு குடும்பத்தினரும் பிரித்து தங்கள் வீடுகளுக்கு வருமாறு அழைத்தனர். அவர்களுக்கு தனித்தனி வீடுகள் இருக்கவில்லை. வசதி குறைந்தவர்கள். லயன்களில்தான் வாழ்கின்றார்கள். ஆனால் என்ன உபசரிப்பு. எங்களை அவர்கள் எல்லோரும் மாறி மாறி உபசரித்தார்கள். சூடான தேநீர் கிடைத்தது. தேநீரைக் கருப்பட்டியைக் கடித்துக் கொண்டே குடித்தோம். சமையல் தயாராவதற்கு முன்னர் வறுத்த கடலை கிடைத்தது.

பிறகு சோறும் இரண்டு கறிகள், துவையல் என அவர்கள் பரிமாறினார்கள். எங்களுக்கு வியர்க்கும் என்று பனையோலை விசிறிகொண்டு விசிறிவிட்டனர்.

மூக்கு முட்டச் சாப்பிட்டோம். காலை ஆறு மணியானதும் முறுக்கு, நெல்லிக்காய், கடலை, கருப்பட்டிக் காப்பி இப்படிப் பல உபசரிப்புகள். எமது தோழி ரிப்கா கவிதை உள்ளம் படைத்தவள். ஒரு வாழ்த்துக் கவிதையையே அந்நேரத்தில் பாடிவிட்டாள். அவ்விடத்திலிருந்த எல்லோரும் கைதட்டி ரசித்தனர். அவ்விடத்தை விட்டு வரும்போது நாங்கள் ஐந்து பேரும் சேர்ந்து அவர்களுக்கு ஐந்நூறு ரூபாவைக் கொடுத்தோம். அவர்கள் பதறிப்போய் எமது கையைப் பிடித்துக்கொண்டனர்.

'தாயி! பசிக்கு உணவு கொடுப்பது மனித தர்மம் தாயே.. அதற்குப் பணம் வாங்குவது சோற்றுக்குச் செய்யும் துரோகம். இனி ஒருமுறை இந்தப் பக்கம் வந்தால் இங்கு வந்துவிட்டுப் போங்கள்' எனக் கண்ணீரோடு எங்களை பத்திரமாக அனுப்பி வைத்தார்கள்.

குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். பாட்டு வேற.. வாடா மாப்பிள்ள.. வாழை மரத் தோப்புல வாலிபோல் ஆடலாமா? ஆனால் அங்கு வாழைத் தோட்டமும் இல்லை. வாலிபோலும் இல்லை. அப்பா! தெரியாமலா சொன்னார்கள் மனித நேயம் கிராமங்களில் தான் இருக்கிறது. இதை மகாத்மா காந்தி சொன்னார். இப்போ நானும் சொல்கிறேன்.

சிவகுமாரன் தம்பதிகள் கண் கலங்கினர். சாந்தினி கேட்டாள். 'ஏன் அம்மா நீங்கள் அழுகிறீர்கள். அந்த ஏழை மக்களின் பெருந்தன்மையை நினைத்தா?'

'இல்லை மகளே! எங்களை நினைத்து வெட்கப்பட்டு அழுகிறோம். அந்த ஏழைகளிடம் இருந்த நல்ல பண்புகள் எம்மிடம் இருக்கவில்லையே. இது எமக்கு ஞானம் பிறந்த கதை. புத்தருக்கு போதி மரத்தின் கீழ் ஞானம் கிடைத்தது. எமக்கு இன்று உன் மூலம் ஞானம் கிடைத்தது.'

தூசி துடைத்து விடப்பட்ட கண்ணாடி போல இருவர் மனமும் பளிச்சென்று இருந்தது. ஆம் மனித நேயத்தின் சக்தியை அவர்கள் உணர்ந்துவிட்டனர்!!!

வாசகர் கவனத்திற்கு

தாங்கள் அனுப்பும் படைப்புக்களை தட்டச்சு செய்து மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பின், பூங்காவனம் விரைவாக வெளிவர அது பேருதவியாயிருக்கும். ஆதலால் தயவுசெய்து மின்னஞ்சல் செய்ய முடியுமானவர்கள் இதை கருத்தில் கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

# ஈழமதைப் புகழச் செய்திடுவோம்

ஈழம்வாழ் மாந்தர்களே எமக்குள் ஏன்தான்
இந்தப் பிணக்குகள் எல்லாம் - நாட்டில்
வாழ எத்தனையோ வழிவகைகளிலிருந்தும் நாம்
பகையென்னும் சிறைக்குள் வீழ்ந்துள்ளோமே!

மண்ணகத்தில் அருளிய வளங்கள் யாவும்
நம்மீழத்திற்கும் ஈந்தானன்றோ - இறையோனும்
எண்ணிலடங்கா பொக்கிஷங்களையும் தந்து
கரை புரண்டோடும் நதிகளையும் தந்தானேயவனும்!

இத்தனை வளம் வாய்ப்புக்களையும் எமக்கு
தந்திறைவனும் அவைகள் போதாதென்று
எத்திசையெங்கும் சுற்றிவர கடலும் தந்து
சிறப்பித்தானே நம் நாடாம் ஈழத்தை!

துன்பங்கள் சில நம்மீழத்தில் ஏற்பட்டதுதான்
அவைகளும் ஏகனின் நாட்டமன்றோ
இன்பங்களும் துன்பங்களும் இயற்கையின் நியதியே
எதுவானாலும் மனம் தளர்ந்திடாத மக்கள் நாம்!

இறைவன் படைத்த உலகத்தில் சிறு துளிதான்
இச்சிறிய ஈழநாடாம் எம் நாடு
நிறைவாய் அவன் படைத்த படைப்புக்கள் நலமாய்
வாழவே அவனும் விரும்புகிறானய்யா!

பள்ளிவாயல்களைத் தகர்த்தெறிந்தார்கள் அத்துடன்
இந்துக் கோயிலையும் விட்டார்களில்லையே
தெள்ளிய அறிவில்லாத இனப்பேரினவாதிகள் சிலரின்
அட்டூழியங்கள் அடாவடித்தனங்களய்யா இவைகள்!

இருமொழிகள் மூவினமென்ற மக்கள்தான் நாம்
ஈழநாட்டவர்களென்று ஓரினமாகிடுவோம்
ஒருவருக்கொருவர் வேற்றுமைகளை மறந்திடுவோம்
ஈழநாடாமிதனைப் புகழடையச் செய்திடுவோம்!!!

கலாபூஷணம் எம்.எம். அலி அக்பர் - கிண்ணியா

# மங்கையர் தினம்

● கா. தவபாலன் - பேராதனை



உலகெங்கும் வாழும் மங்கையர்கள் மார்ச் மாதம் எட்டாம் திகதியைத் தமது உரிமைத் தினமாகக் கொண்டாடி வருவது நாமெல்லாம் நன்கறிந்த விடயமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பெண்கள் எந்தெந்த வகையில் அடக்கியொடுக்கப்படுகின்றனர், இதற்கான பரிகாரம் என்ன என்ற விடயங்களையிட்டு ஓரளவு சுருக்கமாக ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

யுத்தத்தால் தமது கணவன் மாரை இழந்த பல்லாயிரக் கணக்கான பெண்கள் வருமானம் இன்றி விதவை என்ற பெயருடன் கஷ்ட ஜீவியம் நடத்தி வருகின்றார்கள். அத்தகையோருக்கு உரிய நஷ்டஈடுகளை வழங்குவதோடு யுத்தத்தின் பின்னரான மீள்கட்டுமான வேலைகளில் இவர்களுக்கு முக்கிய பங்கு வழங்கப்பட வேண்டும்.

மலையகப் பெண் தொழிலாளிகளுக்கு, ஆண்களுக்கு நிகரான சம்பளம் வழங்கப்படுவதில்லை. வயதுக்கு வந்த பெண் பிள்ளைகள் உட்பட ஏழெட்டுப் பேர் கொண்ட குடும்பம் ஒரேயொரு லயன் காம்பிராவுக்குள் முடங்கி வாழும் நிலையும் காணப்படுகின்றது. ஆகவே மலையக மக்களின் வீட்டுப் பிரச்சினை தீர்க்கப்படுவதோடு மலையகப் பிள்ளைகளின் கல்வி விடயத்திலும் அதிக அக்கறை காட்டினால் மட்டுமே மலையகப் பெண்களுக்கு விடிவு காலம் பிறக்கும்.

'பணிப்பெண்' என்ற பெயரில் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் பெண்கள் எஜமானர்களால் துன்புறுத்தப்படும் செய்திகளை அடிக்கடி பத்திரிகைகளில் வாசிக்க நேர்கின்றது. அந்நியச் செலாவணிக்கு ஆசைப்பட்டுப் பணிப் பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவது கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குவது போன்ற செயலாகும். ஆகவே வேலையற்ற பெண்களுக்கு உள்நாட்டிலேயே வேலை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தால் அது பெண்களுக்குச் செய்யும் பேருதவியாக அமையும்.

பாலியல் வன்முறைகளும், சிறுமியர் துஷ்பிரயோகங்களும் நாடெங்கிலும் பல்கிப் பெருகிவிட்டன. நாடெங்கிலும் அதிக எண்ணிக்கையிலான பொலிசார்

கடமை புரிகின்ற போதிலும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையே நீடித்து வருகின்றது. எனவே பாலியல் குற்றங்களுக்கு அதிக பட்சத் தண்டனை வழங்கும் விதமாகச் சட்டத் திருத்தங்கள் செய்வதும் அவசியமாகும்.

பெண்களின் பலத்தை எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிடுவது தவறானதாகும். இலங்கையின் சனத் தொகையில் ஏறக்குறைய சரி பாதியாகக் காணப்படும் பெண்கள், பெண் அடக்குமுறைக்கு எதிராக மட்டுமல்லாமல் வறுமை, கல்லாமை, மதுபாவனை, போதை வஸ்துப் பாவனை, வேலைவாய்ப்பின்மை, சிறுவர் துஷ்பிரயோகம் போன்றவற்றுக்கு எதிராகவும் போராடத் தம்மை அணிதிரட்டிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்!!!

# காதல் சிறகு

நித்திரையிலும்
நிலைகுலைந்து போனேன்
காதலி நீ
கனவிலும் தோன்றி
கலகம் புரிந்ததால்!

மறந்து வாழும் நீ
மரண வேதனை கொடுப்பது
ஏன்?

என் வாழ்வைக்
குருடாக்கிவிட்டு
என்னுடலைக் குத்திக்கிழித்து
குருதி குடித்தாய்!

திருப்தி இல்லாமல்
திண்டாடுகிறேன்
அடுத்து செய்யவிருக்கும்
அநியாயம் எதுவென்று
தெரியாமல்!

ஓ...
மரணம் மட்டும்தானே
மீதம் இருக்கு?

மரணம் என்னை
மண்ணறையில் வைத்தாலும்
கரணம் போடலாம்
காதலின் சுவடு!

கல்லறையிலும்
காதலின் சில்லறைகள் தான்
சண்டையிடக்கூடும்
அதில் உனக்கு
அனுபவம் தானே மனமே!!!

மிகிந்தலை ஏ. பாரிஸ்

# கெட்ட தொடுகை

## சிறுகதை

● சூசை எட்வேட்

சுந்தரேசனுக்கு திருகோணமலையிலிருந்து அழைப்பிதழ் வந்தது. தொலைபேசியூடாகவும் அழைத்திருந்தார்கள். அழைத்தவர்கள் உறவினர்தாம். சாமத்தியச் சடங்காம். யாழ்ப்பாணம் தம் இருப்பிடம் இருந்து திருகோணமலை போவதென்றால் சுந்தரேசன் மனைவி சுந்தரிக்கு பெரும் குதூகலம்தான். அவர்களின் மூத்த மகன் குடும்பம் அங்குதான் இருக்கின்றனர். பேத்திகள் இருவர் அந்தா இந்தா என்று இருக்கின்றனர் சாமத்தியப்படுவதற்கு. சுந்தரி அடிக்கடி வாயூறிச் சொல்லிக்கொண்டே இருப்பாள்.

'என்ர பேரப்பிள்ளைகள்ற சாமத்தியத்தப் பார்த்துப்போட்டு போவம் எண்டால் இதுகள் இப்போதைக்கு சாமத்தியப்படுகிற சாயலைக் காண இல்ல. இதுகளோட ஒத்ததுகள்ற சாமத்தியம் அடுத்தடுத்து நடந்து கொண்டே இருக்கு...... எனக்கும் பிரஷர் கூடிக்கொண்டே வருகுது. எங்க காட்டியும் சுகம் வருகுதில்ல. அதுக்கிடையில் இந்த நல்ல காட்சிய எண்டாலும் பார்த்துப் போட்டுப் போவம் எண்டால், அதுகும் கெதியா நடக்கிற சாயலக் காணஇல்ல.' என்று அடிக்கடி பிரலாபிப்பாள்.

இப்போதும் பூப்படைந்த புனித நீராட்டு விழாவுக்கான அழைப்பு வந்ததும் அவளின் பிலாக்கணம் கூடுவதாயிற்று. எப்படியோ, சுந்தரேசன் தம்பதிகள் வயதான வருத்தமான சிரமங்களை எல்லாம் பொருட்படுத்தாமல், நீண்ட தூரநேர பிரயாணத்தை சிரமப்படாது சிரை மேற்கொண்டனர். எல்லாம் பேர்த்திகள் மீதுள்ள பக்தி விசுவாசம்தான். அவர்களுக்கு புஸ்பவதியான பெண்ணை வாழ்த்துவது சடங்கில் கலந்து கொள்வதல்ல முக்கிய குறிக்கோள். தம் பாசத்துக்குரிய பேர்த்திளை ஆரத்தழுவிக் கொள்வதே அவர்களின் இலக்கு. திருமலை போவதற்கு ஏதாவது சாட்டு வராதா யாராவது மண்டையப் போடமாட்டார்களா என்றுகூட காத்துக்கிடப்பார்கள்.

நல்லவேளை இம்முறை ருதுவான அழைப்புத்தான் உருவாயிற்று. சிரமங்களை பொருட்படுத்தாமல் திருமலை வந்து சேர்ந்துவிட்டனர். பேத்திகளை ஆரத்தழுவினர். முத்தமழை பொழிந்தனர். அவர்களை பார்த்துக் கொண்டிருப்பதே இவர்களுக்குப் பேரானந்தம். மருந்து தேவையில்லை, உள்ள நோய்கள் எல்லாம் குணமாகிவிடும் போலிருந்தது.

உறவினரின் சாமர்த்தியத்துக்கு போய் வந்தார்கள்தான், ஆனால் கருத்தெல்லாம் தம் செல்லப்பிள்ளைகள் மீதுதான். கவனம் மட்டுமல்ல,

கவலையும்தான். சுந்தரி அடிக்கடி புலம்புவதுபோல் இன்றும் கணவன் காதைக் கடிப்பதுபோல் குசுகுசுத்தாள்.

'எங்கட பிள்ளைகளுக்கு குறைஞ்ச வயசில பக்குவப்படுதுகள்'. எங்கட பிள்ளைகள் என்னடா எண்டால் சும்மா காலால நெடுத்து வளருதுகளே அல்லாமல் ஆளாகிற சாயலக்காண இல்ல. சுந்தரேசனின் மகன் வெளிநாட்டில். அவன் காசை மட்டும்தான் அனுப்புவான். ஆனால், ஆடம்பரம்காட்டி பணத்தைப் பாழடிக்காமல், சிக்கனமாய் குடும்பம் நடத்தி, பொருள் சேர்த்து இரண்டு பெண்பிள்ளைகளுக்கும் இரண்டு வீடு தனியே நின்றுகட்டி முடித்துவிட்டாள் மருமகள். உண்மையில் அவள் கெட்டிக்காரிதான்.

இருவரும் மனதுள் வாழ்த்திக் கொண்டனர் மருமகளை. வந்த வேலை முடிந்தாலும், சொந்தவீடுவளவு எப்படியானாலும் தங்கள் மகன் பிள்ளைகளை அவ்வளவு சீக்கிரத்தில் விட்டுவிலக மனதாயில்லை. இவர்கள் எப்போதும் இப்படித்தான், திருமலை வந்தால் யாழை மறந்தேவிடுவார்கள். பெரிய சிரமப்பட்டு பிரிய மனமில்லாமல் பிரியாவிடை பெற்றுத்தான் யாழ்போய் சேர்வார்கள். சுந்தரேசன் இளைப்பாறிய ஆசிரியர். இளைப்பாற்றிச் சம்பளம் பெறுபவர். என்றாலும் அவர் மகனும் இடைக்கிடை என்றாலும் உதவிப்பணம் அனுப்பாமல் விடுவதில்லை. அவர்களுக்கு வாழ்வாதாரத்தில் எந்தக்குறையும் இல்லை. அவர்களின் எண்ணம் கனவு எல்லாம் இப்போது, பேரப்பிள்ளைகள்தான். மனிதரின் குணாதிசயங்களை நினைத்தால் விசித்திரமாகத்தான், இல்லை சிரிப்பாகத்தான் இருக்கும்.

சின்னவயதில் எல்லாவற்றுக்கும் பெற்றோரையே எதிர்பார்த்து அடம்பிடிக்கும். இளமை அரும்பியதும், வளர்த்துவிட்ட வீட்டை மறந்துவிட்டு துணைதேடி சிட்டாய் பறக்கும். பிறகு துணையையும் அவட்சியப்படுத்தி எங்கள் பிள்ளைகள்தான் எங்கள் உயிர் என்று சொல்லும். வயதாக பிள்ளைவயிற்றுப் பிள்ளைகள்தான் உயிரிலும் மேலானது என்று சொல்லும். மனிதன் சரித்திரமே விசித்திரம்தான். மருமகள் தனிவீட்டில் தனியாக பிள்ளைகளோடு இருக்கிறா என்று பேர்தான். ஆனால், பெற்றோர் சகோதரங்கள் இனசனம் எல்லாம் அருகாமையில்த்தான் இருக்கின்றனர். உதவி கொடுத்தும் பெற்றும் உறவாடியே வருகின்றனர். அடிக்கடி மாமன் மச்சான் சித்தப்பன் பெரியப்பன், சித்தி, சின்னம்மா பெரியம்மா, பெற்றம்மா பெற்றப்பா என்று வந்துபோய்க் கொண்டே இருப்பர். இந்தப்பிள்ளைகள் மீது அன்பைச் சொரிவர். வாரி அணைப்பர். ஏன் ஒரு இனிப்பாவது இனிப்புச் செய்தியாவது கொடுக்காமல் போகமாட்டார்.

சுந்தரேசனுக்கு மிக்க மனநிறைவாகவே இருக்கும். பூரித்துப்போவார். நாம் பக்கமிருக்கத் தேவையில்லை, மகன் தொலைவில் இருந்தாலும், தொல்லையில்லாமல் அன்பு ஆதரவோடு பாதுகாப்போடு இருக்கின்றனர் என்று மனநிறைவு அவருக்கு. ஆனால் சுந்தரிக்கு சற்று பொறாமைதான். முழு உரித்தான தாங்கள் இருக்க, வேறு யார் யாரோவெல்லாம்

கொஞ்சிக்குலாவி உரிமை கொண்டாடுகிறார்களே என்று.பல உறவுகள் வந்துபோனாலும், மாமன் ஒருவன் மருமகளின் தம்பியானவன் நிரந்தரமாகவே அவர்கள் வீட்டில் தங்கியிருப்பான். பெற்றோர் அருகில் இருந்தாலும், சாப்பாடு படுக்கை எல்லாம் அக்காவோடுதான். அக்காவுக்கு அவனால் பெரும் உதவி. அந்தப்பெரிய வீடுவளவை கூட்டுவது பெருக்குவது துப்பரவாக்குவது, விறகு கொத்துவது எல்லாம் இவன் பொறுப்புத்தான். பிள்ளைகளை, மருமகள்மாரை தன் முச்சக்கரத்தில் பாடசாலை கூட்டிச்செல்வது, வீடு கொண்டுவந்து சேர்ப்பது எல்லாம் இவன் பொறுப்புத்தான்.

வேறு உறவுகள் வந்து அன்பைப் பரிமாறி ஒத்தாசை புரிந்தாலும், குடும்பத்தலைவன் வீட்டில் இல்லாத குறையைத் தீர்த்துவைப்பவன் இவன்தான். அக்காவுக்காக இவன் சேவை மனப்பான்மையால் செய்யும் உதவிகளைக் கண்டு இவர்கள் பூரித்துப்போவர். மகனும் தொலைவில், நாங்களும் இல்லை அருகாமையில், என்ற நிலையில் அவனை உளமார வாழ்த்தவே செய்தனர். அவனிடம் எந்தத் துர்ப்பழக்கமும் இல்லை. தானுண்டு தன் கடமையுண்டு என்று இருப்பவன். சுந்தரி மனம்விட்டு ஒருநாள் சொன்னாள் இப்படி

'எனக்கொரு பொம்புளப் புள்ளை இருந்தது என்றால் நான் இவனுக்குத்தான் கட்டி வைப்பன்' என்று. ஆனால் அவனுக்கு கல்யாணம் பேசி முற்றாகிவிட்டது. திருமணம் முற்றுப் பெற்றுவிட்டால், இவர்கள் பாடு சற்று கஸ்டம்தான். பேத்திமாரில் மூத்தவளுக்கு வயது பதினைந்தாகிவிட்டது. நெடுத்து வளர்ந்திருக்கிறாள். உடல்வாகு பூரிப்பாய் இல்லை. மெல்லியதேகம் கறுப்பி. ஆனால் புத்திக்கூர்மையானவள். படிப்பில் கெட்டிக்காரி. மிகவும் சுறுசுறுப்பானவள். ஆனால் தன்னடக்கமானவள். தானுண்டு தன்படிப்புண்டு என்று இருப்பவள். ஆண்பாலாரிடம் அதிகம் நெருக்கமில்லாமல் பழகுவாள். பேரிய காரியகாரிதான் அவள்.

இளையவள் இவளுக்கு நேர்மாறானவள். தமக்கையைவிட இரண்டு வயதுதான் இளையவள். ஆனால் அக்காவுக்கு முன்னம் புஸ்ப்பவதியாகி விடுவாள் போலிருக்கும். வயதுக்கு மீறிய உடல் வளர்ச்சி. அங்கங்கள் திரட்சியாகி மெருகேறிக் கொண்டிருக்கும். பூமொட்டு பூக்க பார்த்திருப்பது போலிருக்கும். வெள்ளைத்தோலும் சேர்ந்து இன்னும் அழகை மினுக்காக்கிக் கொண்டிருக்கும். ஆனால்.. ஆனால் புத்திசித்தம் மிகவும் குறைந்தவள். சித்தசுவாதீனம் குறைந்தவள். படிப்பிலும் மட்டரகமானவள். மிகவும் பிடிவாதகுணம் கொண்டவள். தனக்குப்பிடித்தது கிடைக்காவிட்டால், தன் சொற்படி நடக்காவிட்டால் பெரிய ஆர்ப்பாட்டம் பண்ணுவாள். அகப்பட்டதை எறிந்து உடைப்பாள். தன் கையைக்கூட கடித்துவிடுவாள். மற்றப்படி பெரும்பாலும் ஒரு வெருளிச் சிரிப்போடு ஓடியாடி விளையாடித் திரிவாள். இந்த அப்பாவிப் பெண்ணை வெகுசுலபமாக யாரும் ஏமாற்றிவிடலாம். இவள் எதிர்காலம் என்னவாகும்? என்று சிந்தித்து கவலைப்படுபவர் ஆசிரியர் சுந்தரேசன் மட்டும்தான். மற்றயாருக்கும், தாயுட்பட அந்தக் கவலை இருப்பதாகத் தெரியவில்லை. சொல்லுக்கேக்கிறாள் இல்ல. படிக்கிறாள்.

இல்ல என்று பேசுவதோடு சரி. ஆவர்கள் ஏன் கவலைப்படப் போகிறார்கள்? அப்பன் வெளிநாட்டில். இப்பவே அவளுக்காக கலவீடு கட்டியாயிற்று. நகைநட்டும் தேடியாயிற்று. பிறகென்ன கவலை?

ஆசிரியர் சுந்தரேசன் உளவியலும் கற்றுத்தேர்ந்தவர். உளவியல் ரீதியாக அப்பிள்ளையை அணுகி வழிப்படுத்தலாமா என்று யோசித்து அவளை கூர்மையாக அவதானிக்கலானார். ஆவள் சதா தாயின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு தான் திரிவாள். அம்மாவின் பார்வை படக்கூடிய சுற்றுவட்டத்தில் நின்றுதான் விளையாடுவாள். அதற்கு அடுத்தபடியாக மனம்விட்டுச் சேருவது, பழகுவது சல்லாபிப்பது வீட்டோடு இருக்கும் மாமாக்காரனோடுதான். அவன் ஆட்டோ ஓடிவந்ததும் மைதிலி என்று அவள் பெயரைக் கூப்பிட்டுக் கொண்டுதான் வருவான். இவளும் விழுந்தடித்துக் கொண்டு 'மாமா.. மாமா...' என்று வெருளிச் சிரிப்போடு அவனைப்போய் கட்டிப் பிடிப்பாள். அவன் வாரியணைத்து முத்தமழை பொழிவான். ஆவளைக் கட்டிப் பிடித்து சக்கரமாய் சுற்றுவான். இப்படி இவர்கள் அன்புப் பிணைப்பும் சரச விளையாட்டும் வெகுநேரம் நீடிக்கும். இதேபோல் தொடர் கதையாகும். கால் சட்டைப் பைக்குள் இருந்து அவளுக்காக வேண்டிக்கொண்டு வந்த ருசிப் பண்டங்களை கன்டோஸ், மிக்ஸர் என்று கொடுப்பான்.

அவள் வேண்டிக்கொண்டு குதூகலத்தோடு துள்ளி ஓடுவாள். அப்போதும் ஒரு வெருளிச்சிரிப்பு சேர்ந்திருக்கும்! 'முழுதையும் நீ திண்டிடாதை. அக்காவுக்கும் கொடு' என்பான். அக்காவை இப்படி அழைத்து இழுத்தணைத்து கொடுத்தனுப்புவதைத் தவிர்த்தான். ஏனென்றால், இந்தச் சேட்டை சல்லாபங்களுக்கு அவள் இடம் கொடுப்பதில்லை. கூப்பிட்டாலும் கிட்டப்போவதில்லை. எட்ட நின்றே பதில் சொல்வாள். ஆனால் அவர்களுக்கிடையில் அன்புத்தொடர்பு இல்லாமல் இல்லை. பக்கமிருந்து சிரிப்பாள். கதைப்பாள், அவ்வளவுதான். எல்லாம் அளவோடுதான்.

மைதிலியை மடிமீது வைத்து கடலை கச்சானை தானும் தின்று அவள் வாயிலும் ஊட்டி பலகதைகளும் பேசி மகிழ்வான் மாமன். அவன் கரங்கள் அவள் தேகமெங்கும் ஆரத்தழுவி வருடிச்செல்லும். அவளும் பேத்தைச் சிரிப்போடு அகமகிழ்ந்து கிடப்பாள். தாய்க்காரி இதையெல்லாம் இடைக்கிடை வந்து பார்ப்பாள். அவளும் பூரித்துப் போவாள் அவர்களின் பாசப் பிணைப்பைக் கண்டு. எல்லோரும் படுக்கைக்கு அறைக்குள் அடைக்கலமானாலும், இவன் கூடத்து வாசலோடுதான் படுக்கையைப் போட்டுக் கிடப்பான், காவலாளியாக. இவன் படுத்துக் கிடந்து கொண்டு கூப்பிடுவான்.

'மைதிலி, கெதியா வந்துற்றுப்போ, என்ன இண்டைக்கு மாமாவ கவனிக்கிறாய் இல்ல. மாமாவ மறந்து போனியா?' அந்த அப்பாவிப் பெண் சிரித்துக்கொண்டு ஓடிவந்து மாமாவுக்கு மேல் ஏறிப்படுத்திடுவாள். சிரித்து சிரித்து பல கதைகளும் பேசி கட்டிப்புரள்வர். வெகுநேரத்தின் பின்தான் தாயின் குரல் கேட்கும்.

'மைதிலி போதும் வா. அறைக்க வந்து படு. வேளியால சரியான குளிர். தடுமல் பிடிக்கும்' குளிர் இல்லாவிட்டால் அப்படியே படுக்க விட்டுவிடுவாளோ என்னமோ. பகல்போதில் பல உறவினரும் வருவார்கள், பலவிதமாயும் உறவாடிச் செல்வார்கள். ஒரு சித்தப்பா முறையானவர் அடிக்கடி வருவார். மைதிலியைக் கூப்பிட்டுக்கொண்டு. அவர் மணமானவர். பிள்ளைகளும் உண்டு. ஆனால் வயதில் இளையவர். அவரும் அவளை அழைத்து அணைத்து முத்தமழை பொழிந்து அன்பு முத்திரை பதித்துத்தான் செல்வார். ஆனாலும் அவர் கடை வைத்திருப்பதால் அதிகநேரம் மெனக்கெடமாட்டார்.

யாழில் இருந்து வந்த நாளில் இருந்து இந்தக்காட்சிகளை அனுதினமும் தரிசித்து தரிசித்து சுந்தரேசன் தம்பதிகளுக்கு மனக்கிலேசம் ஏற்பட்டுக் கொண்டே வந்தது. அதிலும் சுந்தரிதான் முந்திக்கொண்டு வந்து, கணவன் காதோடு முறையீடு செய்துகொண்டே இருந்தாள்.

'என்னங்க, நடக்கிற கூத்த நீங்களும் பார்த்துக் கொண்டுதானே இருக்குறீங்க. இதென்ன பக்குவப்படப்போற புள்ளைய மாமன் பாசமெண்டு சொல்லி மோசமாக வசைக்கி கசக்கி எடுக்கிறானே. இதெல்லாம் நல்லாவா இருக்கு? பார்க்கப் பார்க்க வயித்தக் குமட்டுது. இதக்கண்டிக்க வேண்டிய தாயே கவனிக்காம சிரிச்சுக்கொண்டிருக்கு. அவங்களுக்க அவ்வளவு அன்பாம் பாசமாம். இவருக்குத்தான் கண்டறியாத ஒருபாசம். நான் இதைப்பற்றி ஏதும் சொன்னால் தன்ர தம்பியில தேவையில்லாமல் வீண்பழி சுமத்தி கதை கட்டுறன் எண்டு மருமகள் சீறிச் சினப்பாள். இத இப்பிடியே விட்டுப்போட்டு போகேலாமலும் கிடக்கு. நீங்கதான் அவவுக்கு பக்குவமா எடுத்துச்சொல்லி இதுக்கு ஒருவழி செய்யவேணும்.'

மனைவி சொன்னாலும் சொல்லாவிட்டாலும் இதற்கொரு வழிபண்ணியே ஆகவேண்டும் என்றுதான் தீர்மானித்திருந்தார் சுந்தரேசன். அவர் ஆறுதலான தனியான ஒருநேரம் பார்த்து மருமகளை அணுகினார்.

'பிள்ள, உன்னோட தனிப்பட்ட முறையில உன்ரகுடும்ப நன்மைக்காக சில விசயங்களப் பேச வேண்டியிருக்கு'

'சொல்லுங்கோ மாமா, நீங்க எதைச் சொன்னாலும் செய்தாலும் எங்கட நன்மைக்காகத்தான் எண்டு எனக்கு நல்லாவே தெரியும். அதிலையும் நீங்க நல்லாப் படிச்ச நீங்க. எந்த நேரமும் புத்தகமும் கையுமாக இருக்குற நீங்க. நீங்க சொன்னா அது சரியாத்தான் இருக்கும்'

சுந்தரேசனுக்கு தெம்பு வந்தது. 'பிள்ள, நீங்க ரீ.வி. செய்தி பத்திரிகைச் செய்தி.. எண்டு எல்லாம் பார்க்கிற நீங்கள்தானே. கொலை, கொள்ளைகள், ஆள்கடத்தல்களும் எல்லே கூட நடக்குது. அதைவிடக்கூட இப்ப என்ன நடக்குது தெரியுமா? பாலியல் வல்லுறவு. சிறுவர் துஷ்பிரயோகம் தான் கூட நடக்குது'

'ஓம் மாமா, நீங்க சொல்லுறது சரி. எங்கட அயலிலேயே இப்பிடியான விசயங்கள் நடந்து கொண்டுதான் இருக்கு. சித்தப்பாக்காரனொருவன் கிட்டடியிலதான் பெரிய புள்ளையாப்போன பிள்ளைக்கு பிள்ளையக் குடுத்துப்போட்டான். என்ன அநியாயம் பார்த்தீங்களா. ஆனா அவங்கள் தங்கட சொந்தமெண்டு மானம்போகுமெண்டு மறைச்சுப்போட்டாங்கள்.'
'பாத்தியோ, இதெல்லாம் தெரிஞ்ச புறகுமா நீ அலட்சியமாய் இருக்கிறாய்? 'ரீன் ஏஜ்' (வளரிளம் பருவம்) வயதில பொம்புளப் புள்ளைகள்ள மிகவும் அவதானமா எப்போதும் எச்சரிக்கையாக இருக்கவேணும். ஆண்கெட்டால் அது அவனோடதான். ஆனா, பெண் கெட்டால் பரம்பரையையே தாக்கும். மாறாத பழிவந்து சேரும். நாங்கள் வெளியில இருந்து மட்டும்தான் எங்களுக்கு ஆபத்துவரும் எண்டு எண்ணுறது எங்கட முட்டாள்த்தனம்.

வேலிய அடைச்சி சுற்று மதிலையும் கட்டி, படலைக்கு பூட்டும் போட்டுற்று கிடந்தால் எங்களுக்கு ஒரு ஆபத்தும் வராது எண்டு நம்பி ஏமாறுறம். வீட்டுக்குள்ள இருந்தும் ஆபத்து உருவாகும் எண்டத உணருகிறோமில்ல. இது எங்கட பலவீனம். மனிதன் பொதுவாகவே பலவீனன். உணர்ச்சிகளுக்கு அடிமையானவன். அவன், தம்பி மாமன் சித்தப்பன் பெரியப்பன் ஆனாலும், ஆசாபாசத்துக்கு அடிமையாகி, தன்னையும் மீறி ஆபத்தில் எங்களையும் வீழ்த்தி தானும் வீழ்வான். பிறகு தலையிலே கையை வைத்து கதறுவான். எங்களையும் கதறவைப்பான். அதன்பிறகு விழித்துக் கொண்டு எந்தப் பிரயோசனமும் இல்லை. முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் புத்தி சாமர்த்தியமாக செயல்பட வேணும். தம்பி, மாமன், மச்சான், சகோதரன் - அன்பு, பாசம், தூய்மை என்று பார்த்து ஏமாந்து போகக்கூடாது. நடவடிக்கையில் இறங்காமல் விடக்கூடாது.'

'என்னெண்டு மாமா சொல்லுறது கண்டிக்கிறது? பிறகு வீட்டுக்கு வராமல் போய்விடுவாங்களே.'

'நீ, அவங்களக் கண்டிக்க வேணாம் உன்ர மகளக் கண்டிச்சு புத்தியா எடுத்துச் சொல்லவேணும். மூத்தவள் புத்திக்காரி. முன்னெச்சரிக்கையாகத்தான் பழகுறாள். இவள் புத்தி குறைஞ்ச அப்பாவிப் பெண்ணு. ஒரு மண்ணும் தெரியாது. எங்க தொட்டாலும் விட்டுக் குடுத்துக் கொண்டிருப்பாள். நாங்கதான் கவனமா வலியுறுத்தி சொல்லிக் குடுக்கவேணும். இதக் கவனமாக் கேள். நல்ல தொடுகை எது? கெட்ட தொடுகை எது? எங்கு தொட்டால் எப்படித் தொட்டால் கெட்ட தொடுகை என்பதை வலியுறுத்திச் சொல்லி தெளிவித்து உணர்த்திவிட வேண்டும். உணர்ந்து தீய தொடுகையின்போது அவளாகவே விலகிக்கொண்டாள் என்றால் பிரச்சினையில்லாமல் பிரச்சினை ஏற்படாமல் தவிர்க்கலாம்.'

நல்லதொரு அறிவுரையைக் கேட்ட திருப்தி மருமகளுக்கு ஏற்பட்டது!!!

# வறட்சியும் மழையும்

மழை காணாப் பயிர்களும்
மண்ணும் தீய்ந்து போன காட்சி
வெய்யிலின் அகோரம் பல நாள் வருத்தி
வறட்சிக் கோலம் தலை விரித்தாடிற்று!

ஆழத் தோண்டிய கிணற்றின் நீரும்
அடியற்று வற்றி வகையற்றிருந்தது
நீர் வீழ்ச்சியில் சொட்டு சொட்டாய்
வடிந்த நீரும் காய்ந்து தீர்ந்தது!

ஆறுகள் யாவும் ஓடிடும் வளமாம் பூமி
மாறுபாடு கொண்டு தூர்ந்து போன நிலை
மேம்பட்ட மனித வாழ்வில் வீழ்ச்சிக் கோலம்
தெம்பிழந்து நொய்ந்துற்று வருந்தியே நின்றனர்!

பயிர்பச்சை பட்டுப் போய்க் காய்ந்து நிற்க
பல்லுயிர்களும் வனத்தில் தவித்துத் திரிந்தன
நீரின்றி அழிந்த உயிரினம் பலவாம்
கருமேகம் கருக்கட்டுவதெப்போது?

மழையே! நீ பெய்யாதிருப்பதேனோ?
உளைந்த உள்ளம் ஏங்கித் தவித்தது
வானத்தை நோக்கியே இறைவனிடம் கரமேந்தினர்
வல்லவன், சொல்லாளன், பக்தன், பாமரன் எல்லோரும்!

நல்லவன் செய்த பிரார்த்தனை பலித்திட
சொல்லவும் வல்லதாய் மழையும் பெய்திட
நிமிர்ந்தன உள்ளங்கள் தெம்பும் பிறந்தது
நலமாய்ப் பெய்த மழையும் நல்லன விளைக்கும்!!!

● வெலிப்பன்னை அத்தாஸ்

# நாச்சியாதீவு பர்வீனின் கவிதைகள் சில ஒரு பார்வை

● சுபாசினி சந்திரகாந்தன்



நவீன கவிதைப் பரப்பில் புதுக்கவிதையின் வகிபாகம் மிக முக்கியமானது. இன்றைய அதிகமான புதுக்கவிஞர்கள் புதுக்கவிதையை தேர்ந்தெடுத்து தமது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்துகின்றனர். அநேகமான புதுக்கவிதைகளில் கவிஞனின் மேதாவித்தனம் மட்டுமே மேலோங்கி நிற்கிறது. வாசகனுக்கு பரிச்சயம் இல்லாத மொழிவழக்கு வாசகனுக்கு சலிப்பையும் கவிதை மீதான வெறுப்பையும் விதைக்கிறது. இதிலிருந்து மாறுபட்டு தனக்கேயான தனிப்பாணியில் கால தேச வர்த்தமானங்களை அழகியல் மாறாதவண்ணம் வெளிப்படுத்தும் இன்றைய கவிஞர்களில் நாச்சியாதீவு பர்வீனும் மிக முக்கியமானவர்.

தான் வாழும் பிரதேசத்தை பகைப்புலமாக கொண்டு கவிதை படைக்கின்ற நுண்ணிய உணர்வுடையவர். சூழலை ரசிக்கின்ற தான் வாழுகின்ற சூழல் மீதான அக்கரை உடைய இளகிய கவிதை மனம் கொண்டவர் இவர் என்பதை இவரது கவிதைகளை ஒன்று சேர வாசிக்கும் போது இலகுவில் நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

கோபத்தையும், சந்தோசத்தையும் கவிதை மொழியில் அலங்கரிக்கும் நாச்சியாதீவு பர்வீனின் "சொல்வளம்" கவிதைகளை மெருகுர வைக்கின்றது. சாதாரண அடிமட்ட வாசகனாலும் வாசித்து ரசித்து உச்சுக் கொட்ட வைக்கும் இவரது கவிதை நடையில் வாசகன் சொக்கிப்போய் விடுகிறான். இப்படி கவிதை எழுதும் இளந் தலைமுறைப் படைப்பாளிகள் அரிதிலும் அரிதாகவே காணப்படுகிறார்கள். அந்த வகையில் அண்மையில் நான் வாசித்து ரசித்த, என்னை ரசிகையாக்கிய நாச்சியாதீவு பர்வீனின் நான்கு கவிதைகள் பற்றிய குறிப்பை இங்கே தருகிறேன்.

என் மரணம் பற்றிய கவிஞரின் கவிதையின் சில வரிகளைப் பார்ப்போம்

இலையுதிர் காலத்தில் / சத்தமில்லாமல் / உதிரும் ஒரு இலைபோல / எனதுயிரும் ஒரு நாள் /பிரிந்து போகும்

மரங்கொத்திப் பறவைகளின் /டொக் டொக் ஒலியினையும் / சில் வண்டுகளின் / இறைச்சல்களையும் / இன்னும் தேனீக்களின் / ரீங்காரத்தையும் / எனது செவிகள் அப்போது / உணரமாட்டா .....

ஒரு அதிகாலையோ / அல்லது அந்திப்பொழுதோ / இல்லை ஒரு கும்மிருட்டோ / எனது உயிர் பிரியும் / நேரமாக இருக்கலாம்

இன்றோ / அல்லது நாளையோ / இன்னும் சில நாட்களின் பின்போ / எழுதப்பட்ட பிரகாரம் / நான் மரணித்துப் போவது உறுதி

என் மரணம் / உறவுகளுக்கு / இழப்பாகவும் / நண்பர்களுக்கு / கவலையாகவும் / என் எதிரிகளுக்கு / சந்தோசமானதாகவும் இருக்கும்

தொலைந்தான் சனியன் / என்று எதிரிகள் / சந்தோசிக்க / இறுமாப்பும் ஆணவமும் / அவர்களுக்குள் / பிரவாகித்து ஓடும்

என் மீது சாமரம் / வீசிய உறவுகள் / என் கபுருக்கு மேலால் / பூமரம் நாட்ட முனைவார்கள்

நண்பர்களோ / என் இழப்பின் உஷ்ணத்திலிருந்து / வெளிவர முயற்சிப்பார்கள்

ஊரவர்கள் / இன்னொரு மரணம் வரைக்கும் / என்னைப்பற்றி / பேசுவார்கள்

எப்போதும் கண்ணீர் விட்டு / நிரப்ப முடியாத / குவலையொன்றாக / தேம்பித் தேம்பித் / அழும் எனது கவிதைகள் / அதன் மரணம் மட்டும்!!!

மரணம் என்பது மறுக்க முடியாத நிஜம் அந்த நிஜத்துள் ஒழிந்து கொண்டிருக்கும் யதார்த்தை அற்புதமாக சுட்டுகிறார். தனது மரணத்தின் பின்னரான உறவுகளினதும் நண்பர்களினதும் இன்னும் எதிரிகளினதும் நடத்தை பற்றி முன்மொழிகின்றார். யாரும் சிந்திக்காத தொடாத அல்லது தொட திராணியற்ற மரணம் பற்றிய இந்தக் கவிதை சாதாரண வாசகனையும் லாவகமாக வளைத்துப் போடுகிறது. இதுதான் கவிஞனின் வெற்றி. மக்களோடு கவிஞன் பேசுவதை விடவும் அவனது கவிதைகள் பேசவேண்டும். இந்தக் கவிதை ஆன்மீகத்தின் ஆணி வேரை ஆழமாக பிடித்து அசைத்துப் பார்க்கிறது. மரணத்தை மறந்து வாழுகின்ற அநேகமானவர்களுக்கு இந்தக் கவிதை மரணம் பற்றிய நிஜத்தை மீள்பதிவு செய்துள்ளது.

அடுத்த கவிதை முருங்கை மரத்தின் கடைசி நாள். இக்கவிதையின் சில வரிகள் இதோ

முற்றத்தில் / ஒரு முருங்கை மரம்

மனைவியின் / முணுமுணுப்பு / அதை வெட்டச்சொல்லி

மரத்தை வெட்ட / மனமில்லை எனக்கு

அதிகாலை பள்ளி எழுச்சியில் / அணில்களின் ஆலாபனை / அதில்தான் அரங்கேறும்

மைனாக்கள் / கூட்டாக வந்து / கும்மாளமடிப்பதும் / இந்த மரத்தில்தான்

அந்திகளை / அலங்கரிக்கும் / செவ்வானக் கதிர்களை / மரமருகில் நின்று / பருகுவதுண்டு

பச்சைக் கிளிகளின் / பங்காளிச் சண்டைகள் / மரத்தை அவ்வப்போது / கலவரப்படுதியதுண்டு

எஞ்சிய உணவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் / தினம் காத்திருக்கும் / இரண்டு நாய்கள் / ஒரு பூனைக் குடும்பம்

ஊர் சுற்றி அலைந்து / களைப்பெடுக்கும் போதுகளில் / தங்கிச்செல்லும் காகம்

இதனால் / மரத்தை வெட்ட / மனமில்லை எனக்கு

மரமா? மனைவியா? / மனைவிதான் முக்கியம்

ஏன் இந்த மரத்தை / வெட்ட வேண்டும்? / மனைவியிடம் கேட்டேன்

மயிர்கொட்டி / கூட்டமொன்றைக் காட்டி / "மரியத்தையும்" / "செய்னபையும்" / பாதுகாக்க என்றாள் ....

ம்ஹூம்... / நம் குடும்பத்தை காப்பாற்ற / இன்னொரு குடும்பத்தை / அழிக்க சொல்கிறாள்

அன்று தான் / முருங்கை மரத்தின் கடைசி நாள்!!!

முருங்கை மரத்தை யார்தான் கவனிப்பது? தேவைக்கு அவ்வப்போது காய்களையும் சிலபோது அதன் இலைகளையும் பறிப்பதோடு எல்லாம் சரி. ஆனால் நாச்சியாதீவு பர்வீன் முருங்கை மரத்தையும் அதனால் அடுத்த உயிரினங்கள் பெறுகின்ற பயனையும் கவிதையாக்கியுள்ளார். முருங்கை மரத்தை வெட்டுவதற்கு மனைவி கூறும் காரணம் நியாயமானதே என்பதை அவரது கவியுள்ளம் ஏற்றுக்கொள்கிறது. மரியத்தையும், செய்னபையும்

மயிர்கொட்டிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டுமென்ற மனைவியின் தார்மீக எண்ணத்தை காதலுடன் ஏற்றுக்கொள்கின்ற மனப்பாங்கு ரசிக்க வைக்கிறது. வாசகனுக்கு எந்த விதத்திலும் எரிச்சல் ஊட்டாத கவித்துவம் நிறைந்த சொற்கள் கவிதைக்கு வலுச் சேர்க்கிறது. நாம் அன்றாடம் காணுகின்ற கடக்கின்ற ஒரு சம்பவத்தை கவிதை ஆக்கியிருப்பது சபாஷ் போடவைக்கிறது.

அடுத்த கவிதை விவசாயி. இக் கவிதையின் சில வரிகள் இதோ

முளைக்கத் தொடங்கிவிட்டது / நெல்விதை

விதைக்குள் ஒளிந்திருக்கும் / அரிசி மணியில் / யார் பெயர் எழுதப்பட்டுள்ளதோ

அதிகாலை சேவலின் / கூவல் ஒலியில் / கண்விழித்து வயலுக்கு / செல்வான் விவசாயி

கசட்டை சாயமும் / கருப்பட்டித் துண்டுமே / அவனது காலை ஆகாரம்

விதைத்த வயல் பரப்பை / அவன் விழிகள் மேயும்

நிலத்தின் நிலவரம் / அறிந்தவன் அவன்

அவனின் வியர்வைத்துளி / நிலத்தை பண்படுத்தும்

மண்புழுவைப் போல / நிலமெங்கும் உலவி / பயிரின் வளர்ச்சியை / பரிசோதிப்பான்

கிளிகளிடமிருந்தும் / மைனாக்களிடமிருந்தும் / இன்னும் நெற் குருவிகளிடமிருந்தும் / விதைகளை காப்பாற்றும் / வித்தை தெரிந்தவன்

சேற்றை உண்ண வரும் / காட்டுப் பன்டிகளை / கட்டுப்படுத்தும் "கலை" தெரிந்தவன்

நெல்லுக்குள் ஊடுருவி / வளரும் புல்லுருவிகளை / இனங்கண்டு இல்லாதொழிக்கும் / சாணக்கியன்

ஒரு கவிஞன் சொன்னான் / விவசாயி... / சேற்றில் கால்வைக்க வேண்டும் / நாம் சோற்றில் கை வைக்க / உண்மை... உண்மை

விதை நட்டு / அது கதிராகி / சூடடித்து - நெல் / வீடு வந்து சேருமட்டும் / விவசாயி உழைக்கிறான்!!!

ஒரு விவசாயக் கிராமத்தின் ஒவ்வொரு குடிமகனும் வயலையும் வாய்க்காலையும் கடக்காமல் வாழ்ந்திருக்க முடியாது. இன்றைய நாகரீகத்தின் நவீன மயமாக்கல், உறவுகளை பிரித்தது. சொந்தங்களை துண்டாடியது. சுயநலத்தின் வேர்களை கிராமத்து பச்சை மனங்களில் பதித்தது. இன்னும்... என்னென்னவோ செய்திருக்கிறது. எத்தனை செய்தாலும் அழகியல் மாறாத கிராமத்து வயல்வெளிகளும் சலசலத்து ஓடும் வாய்க்கால் நீரும் ஒருவர் மட்டுமே நடக்கக் கூடிய அந்த சின்ன வரப்பும் இன்னும் நினைவுகளுக்கு ஒத்தடம் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. தலையை வருடிச்செல்லும் இளம் காலைத் தென்றலைப் போல இது கவிஞரே அவரது கவிதைக்கு இட்ட குறிப்பு. இதை விட சிறந்த குறிப்பை என்னால் தரமுடியாது.

அடுத்த கவிதை பழமில்லா மரம். இக் கவிதையின் சில வரிகள் இதோ

முன்னரெல்லாம் / முற்றிப்பழுத்த / பழம் இருந்த காலத்தில் / மரத்தை சுற்றி / மாம்பழத்தான் குருவியும் / பச்சைக்கிளியும் / மஞ்சள் நிறக்குருவிகளும் / இன்னும் பழந்திண்ணி பறவைகள் பலவும் / மரத்திலே முகாமிட்டு / மந்திர ஆலோசனை நடத்தும்

ஒவ்வொரு கிளையையும் / தம் வசமாக்கி / தந்திரமாய் பழம் உண்ணும் / அரசியல் நுணுக்கம் / அந்தப் பறவைகளுக்கு / தெரிந்திருந்தது

மரத்தை குதூக்கலாமாக்கும் / பறவைகளின் கும்மாளத்தில் / அந்தப் பிரதேசமே / கலகலத்துப் போகும்

காலம் நகர / மரம் மரத்துப்போனது / இலை இழந்து / கிளை இழந்து / கலை இழந்து போனது மரம்

கூடு கட்டி / குடும்பம் நடத்திய / குருவிக்கூட்டம் / அருவிக்கரை நோக்கி / இடம்பெயர்ந்து சென்றன

பழமில்லாத காரணத்தால் / பலமிழந்து போனது மரம்

மரத்தை நோக்கிய / பறவைகளின் வரவு / இல்லாமல் போனது

ஒரு பொழுதில் / யாருமற்ற அனாதையாக / தனிமையில் / இருந்தது அந்த மரம்

இன்னொரு / பழ மரம் தேடிப் பறந்த / பறவைகள் / இந்த மரத்தை மறந்து போயின

மரம் நினைத்துக்கொண்டது / இந்தப்பறவைகளும் / மனிதர்கள் போலவே!!!

# மீண்டும் மீண்டும் கனவுகள்

கனவுகள் வளர்க்கும் யாமினியின்
கண்களில் ஒரு வைத்தியராகும்
ஆசை மின்னிக்கொண்டேயிருக்கிறது!

ஒவ்வொரு நாளும்
புத்தகப்பை சுமக்கும் போதும்
அவள்
கனவுகளையும் சேர்ந்தே சுமக்கிறாள்..
காலங்கள் கடக்கின்றன!

அவள் பூப்பெய்திய பிறகு
ஒரு ஆசிரியையாகும் கனவுகளுக்குள்
இயல்பாக நுழைக்கப்படுகிறாள்!

வரம்புகளுக்குள்
அவளும் அவளது ஆசைகளும்
வரையறுக்கப்படுகின்றன..
இன்னும் வேகமாக
நாட்கள் நகர்கின்றன!

அவளது திருமணத்தின் பின்
நல்ல மனைவியாக
நல்ல மருமகளாக
நல்ல தாயாக
தன்னைத்தானே வடிவமைக்கிறாள்!

புதையுண்ட அவள் கனவுகள்
மீண்டும்
அவளது மகளில் இருந்து தொடங்குகின்றன!!!

● நிந்தவூர் ஷிப்லி

# எழுத்தாளர் அறிமுகம்



ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பசறை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள நமுனுகுல கனவரெல்லையைச் சேர்ந்த வி. சந்திராதேவி, வீரன் - வைஜெயந்திமாலா தம்பதியினரின் புதல்வியாவார்.

பது/ கோணக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியான இவர் நமுனுகுல வி. சந்திராதேவி என்ற சொந்தப் பெயரில் தனது படைப்புக்களை எழுதி வருகின்றார். பாடசாலைக் காலத்தில் தமிழ்த் தினப் போட்டிகளில் பங்குபற்றி பல சான்றிதழ்களையும், பரிசுகளையும் பெற்றுள்ளார்.

2013 ஆம் ஆண்டு தினக்குரல் பத்திரிகையில் 'அன்னை' என்ற கவிதை எழுதியதையடுத்து தினகரன், வீரகேசரி, சுடர் ஒளி போன்ற தேசிய பத்திரிகைகளிலும், பூங்காவனம் சஞ்சிகையிலும், தமிழ் ஆதர்ஸ், பதிவுகள், முத்துக்கமலம், கிண்ணியாநெட் எனும் வலைப்பூக்களிலும் எழுதி வருகின்றார். அத்துடன் www.chandradevipoems.blogspot.com என்ற தன் வலைப்பூவிலும் எழுதி வரும் இவர் கவிதை, சிறுகதை, கட்டுரை, சிறுவர் படைப்புக்கள், விமர்சனம் ஆகிய துறைகளில் ஈடுபாடு காட்டி வருகின்றார். இளம் எழுத்தாளரான இவரை இலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்வதில் பூங்காவனம் மகிழ்ச்சியடைகின்றது. இவரது கவிதை ஒன்றையும், சிறுகதை ஒன்றையும் கீழே காணலாம்.

## ஏங்குகிறேன்

சின்ன மகாராணியே
சிரிப்பில் என்னை
சிறைகைதியாக்கியவளே
அன்புத் தங்கம்
உனைக் காண அம்மா
இங்கு ஏங்குகிறேன்..

பாட்டு நீ பாடினாயாம்..
பார்ப்பவருக்கு நீ
பத்திரம் காட்டினாயாம்
நடனங்களும் ஆடினாயாம்
உன் அப்பா
சொல்லி நானறிவேன்

தங்கத் தாரகையே - உன்
தாமரை முகம் காண
அம்மா இங்கு ஏங்குகிறேன்..

ஆண்டுகள் இரண்டு ஆகட்டும்
அன்பு மகள் அருகே
அம்மா நானும் வந்துவிடுவேன்
பிரிவுத் துயர் ஏதும் இன்றி
பரவசமாய் வாழ்வோம் நாமும்!!!

● வி. சந்திராதேவி - நமுனுகுல

# அதிஷ்டம்

**சிறுகதை** ● வி. சந்திராதேவி - நமுனுகுல

கமலுக்கு பதற்றமாக இருந்தது. என்ன செய்வது என்றே புரியவில்லை சந்தோஷம் கூட சக்தியை மீறி அதிகமாகவே ஆட்டிப்படைத்தது. லொத்தர் டிக்கட்டில் இரண்டு கோடி விழுந்ததே இவன் இப்படியாவதற்குக் காரணம்.

மிகவும் வறிய குடும்பத்திலே பிறந்து கஷ்டங்களை அணுஅணுவாய் அனுபவித்த கமல் ஆயிரம் ரூபாய் நோட்டுகளை அடுக்காய் கையால் பிடித்துப் பார்த்தது இல்லை. மாதத்திற்கு ஒரு முறையேனும் ஒழுங்கான சாப்பாடு சாப்பிட்டதில்லை. கமலின் வீட்டில் கமலும் அவனின் கண் தெரியாத அம்மாவும் தான். சிறுவயதில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட கமலுக்கு ஒழுங்காக நடக்கவோ எந்த வேலையையும் நேர்த்தியாக செய்யவோ முடியாது. தனது பெயரை எழுதும் அளவுக்குதான் அவனுக்கு படிப்பறிவுகூட இருந்தது. தன்னால் முடிந்த கூலி வேலைகளை செய்து தன் தாய் பூரணத்தையும் பார்த்துக்கொண்டான். தான் உழைத்த கூலிப் பணத்தில் என்றும் இல்லாமல் அன்று லொத்தர் டிக்கட் ஒன்றையும் வாங்கினான். இதைக் கண்ட அவ்வூர் பெரியவர் ஒருவர்,

'என்னடா கமல் டிக்கட் எல்லாம் எடுக்குற?' என்று சிரித்தார்.

'இல்ல ஐயா சும்மாதான் எடுத்தன்' என்று தலையை சொரிந்தான் கமல்.

ஆனாலும் கமலின் மனதில் தான் பணக்காரன் ஆனதாகவே எண்ணம் சிறகடித்தது. வீட்டுக்கு வந்த கமல், தான் கூலி வேலை செய்த பெரியசாமி ஐயா வீட்டிலிருந்து கொண்டுவந்த சோற்றுப் பார்சலை அவிழ்த்து தன் தாய்க்கு உணவு பரிமாறினான். காலையில் இருந்து கஷ்டப்பட்டதால் கொஞ்சம் கண்ணயர்ந்தான்.

இன்று கமல் சாதாரணமானவன் அல்ல. இரண்டு கோடிக்கு சொந்தகாரன். இதை ஊரே சொல்கிறது. தன் காசு மூலம் கமல் அம்மாவின் கண்களையும்

சுகமாக்கிவிட்டான். தனக்கிருந்த இளம்பிள்ளை வாத கோளாறுகளையும் சரி செய்துகொண்டான். தன் ஊரைவிட்டு வேறொரு ஊரில் குடிபுகுந்தான். வசதியான வீடு. கமலுக்கு இந்த வாழ்க்கை, ஏதோ சொர்க்கத்தில் இருப்பதைப்போன்றே இருந்தது. புதிய ஆடைகளும் புதிய ஆபரணங்களுமாக தன் தாய் பூரணத்தையும் அழகுபடுத்திப் பார்த்தான்.

பூரணத்தை சந்தோஷமாக வைத்துக்கொள்ள வேண்டும் எனும் எண்ணத்தைத் தவிர, வேறு எந்த மகிழ்ச்சியும் அவனுக்கு இருக்கவில்லை. தான் ஏழையாக இருக்கும்போது எப்படியெல்லாம் ஏக்கங்கள் தனக்கு இருந்ததோ அதே நிலையில் இருக்கும் ஏழைகளுக்கெல்லாம் உதவிகளையும் செய்யத் தொடங்கினான். அத்தோடு சிறிய அளவிலான கடை ஒன்றை நகரத்தில் வாங்கி தனது அம்மாவின் பெயரில் ஹோட்டல் ஒன்றை நடத்தினான்.

நாட்கள் நகர பூரணத்திற்கு, தன் மகனின் கல்யாணத்தை செய்து பார்க்கவேண்டும் எனும் ஆசை ஏற்பட்டது. கமலிடம் தனது வேண்டுக்கோளை விடுத்தாள். கமலும் அதற்கிணங்கி அந்த ஊரில் உள்ள சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த சித்ராவை திருமணம் செய்தான்.

அன்று திங்கட்கிழமை. கமல் டவுனில் உள்ள தன் ஹோட்டலுக்கு சென்றுவிட்டான். எப்போதும் சித்ராவும் கமலுக்கு ஒத்தாசைக்கு செல்வதுண்டு. ஆனால் அன்று தனக்கு தலை வலி என்பதால் வரமுடியாது என்று கூறி சித்ரா போக மறுத்துவிட்டாள்.

கமல் சென்றவுடன் அவசர அவசரமாக தனது மாமியான பூரணத்திடம் வைத்தியசாலைக்கு செல்வதற்கு தயாராகுமாறு சொன்னாள் சித்ரா.

'ஏன்டியம்மா.. நான் நல்லாதானே இருக்கன். காடு வா வாங்குது. இந்த வயசுல எதுக்குமா? என்று அன்பு பிசைந்த மொழியிலேயே பூரணம் கேட்டாள்.

'இல்ல மாமி.. உங்க கண்ண டொக்டர் கிட்ட காமிக்கனும்' என்றாள் சித்ரா.

மருமகளின் பாசத்திற்கு கட்டுப்பட்ட பூரணமும் தயாரானாள். முச்சக்கர வண்டி வந்து கமலின் வீட்டு முன்னே நின்றது. சித்ராவும் பூரணமும் அதில் ஏறினார்கள். சித்ரா ஏதோ சிங்களத்தில் சொன்னாள். கொஞ்ச நேரத்தில் அவள் சொன்ன இடத்தில் முச்சக்கரவண்டி நின்றது.

'மாமி இறங்குங்க' என்று கூறிய சித்ரா, முச்சக்கரவண்டி சாரதியை பார்த்து, 'கீயத?' (எவ்வளவு) என்றாள்.

'துன்சியயய்' (முந்நூறு ரூபாய்) என்றான் சாரதி.

சிங்களம் விளங்காதபோதும் தனக்காக தன் மருமகள் எவ்வளவு கஷ்டப்படுகின்றாள் என்றெண்ணி தன் மனதுக்குள்ளே பெருமிதம் கொண்டாள் கமலின் தாய். அந்த எண்ணம் மாறும் முன்னே என்ன அதிர்ச்சி! தன் மருமகள் தன்னை வைத்தியசாலைக்கு அழைத்து வரவில்லை. அது ஒரு வயோதிபர் இல்லம் என்பதை உணர்ந்தாள் பூரணம். தன்னால் தன் மருமகளுக்கு சிரமம் என்று தன்னை சமாதானப்படுத்திக்கொண்டாள். சித்ரா தன் மாமியிடம் எதுவுமே பேசாமல் அவ்விடத்தில் இருந்து விடைபெற்றாள்.

மாலை 6.00 மணியளவில் வீட்டுக்கு வந்த கமல் சித்ரா கொடுத்த தேநீரை குடித்துக்கொண்டே,

'சித்ரா அம்மா எங்க?' என்றான்.

தடுமாறிய குரலில் தன்னை திடப்படுத்திய வண்ணம் 'அவங்கள..' என்று இழுத்தாள்.

'அவங்கள..?' என்று அதிர்ச்சியுடன் கமல் கேட்டான்.

சித்ரா நடந்தவற்றைச் சொன்னதும் கமல் 'அம்மா' என்று கத்தினான்.

தட்டுத் தடுமாறிய பூரணம் 'என்னடா ஏன் இப்படி கத்துர?' என்றாள்.

திடுக்கிட்டு விழித்த கமலுக்கு தன் தாயைக் கண்ட சந்தோஷத்தில் கண்ணீரே வந்தது. பிறகுதான் இவ்வளவு நேரம் கண்டதெல்லாம் கனவு என்பதை கமல் உணர்ந்தான். தான் படுத்திருந்த பாய்க்கு கீழே வைத்த லொத்தர் டிக்கட்டை எடுத்து உடனே கிழித்து வீசினான்.

'கிறுக்கு பய! கண்ட நேரத்துல ரோட்டுல வந்ததால ஏதோ காத்து கறுப்பு புடிச்சிருச்சிப் போல' என்று தனக்குள்ளே முணுமுணுத்தாள் பூரணம்!!!

# பூங்காவனம் பற்றி வாசகர்கள்

எனதருமை பூங்காவனமே!
நீ சுமந்து வரும் ஆக்கங்கள்
அனைத்தும் அருமை..
உன்னை சந்திக்க
மாதங்கள் மூன்று
காத்திருக்க வேண்டுமா?
மாதாமாதம் வரமாட்டாயா?

எஸ்.ஆர். பாலசந்திரன்

பூங்காவனம் ஆசிரியர் குழுவுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். இதுவரை தொடர்ந்து உரிய காலத்தில் பூங்காவனம் இதழ்கள் வெளிவருகின்றன. அனைத்து பூங்காவனம் சஞ்சிகைகளையும் பத்திரமாக பாதுகாத்து வருகின்றேன். உண்மையில் பூங்காவனம் ஒரு பொக்கிஷமாகும். இந்த சஞ்சிகையின் உள்ளடக்கங்களும், அழகிய அட்டையும் என்னை மிகவும் கவர்ந்துவிட்டன.


ஏ. இக்பால் அவர்களின் இலக்கிய அனுபவ அலசல் பயன் தரவல்லது. நிம்மதி யாருக்கு என்ற சூசை எட்வேட் இன் சிறுகதை மிகவும் தத்ருபமாக இருந்தது. பூங்காவனம் துணை ஆசிரியர் தியத்தலாவ எச்.எப். ரிஸ்னாவின் உறவுகள் என்ற சிறுகதை அலுவலகத்தில் நடக்கும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருந்த விதம் சிறப்பாக இருந்தது. எப்படி எடுத்துரைப்பேன் என்ற ச. முருகானந்தனின் சிறுகதை இரு ஆண்களின் சபல புத்தியை எடுத்துக் காட்டியுள்ளது. தொடர்ந்து இச்சஞ்சிகை எமது இலக்கிய அறிவை வளர்ப்பதில் பங்கெடுக்கும் என்ற நம்பிக்கை உண்டு. வாழ்த்துக்கள்.

எம்.என்.எம். நஸீம் - பொலன்னறுவை

பூங்காவனம் இதழுக்கு முதலில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நீ ஏந்தி வரும் அம்சங்களும், நேர்த்தியும் வாசிக்கத் தூண்டுகின்றது. எஸ்.ஆர். பாலசந்திரன் அவர்கள் தொடர்ந்தும் வித்தியாசமான கதைக் கருக்களை வைத்து சிறுகதை எழுதி வருகின்றார். அவரது சிறுகதைகள் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. இறுதி இதழில் வந்த மலாயன் பென்சனியர் என்ற கதை நகைச்சுவையுடன் கூடிய கதை. அவர் எழுதும் பாணி சிறப்பாக இருக்கின்றது. வாழ்த்துக்கள்.

என். சசிதரன் - திருகோணமலை

# நூலகப்பூங்கா



நூல் - நாத்திகனாகு
நூலாசிரியர் - ஜோ. ஷாம்சன்
வெளியீடு - அன்பியம் வெளியீடு
விலை - 100 ரூபாய்



நூல் - சிரிக்கும் கண்ணீர் துளிகள்
நூலாசிரியர் - ஜோ. ஷாம்சன்
வெளியீடு - அன்பியம் வெளியீடு
விலை - 70 ரூபாய்



நூல் - வெளிச்சம்
நூலாசிரியர் - ஜோ. ஷாம்சன்
வெளியீடு - அன்பியம் வெளியீடு



நூலின் பெயர் - பிரேத பரிசோதனை
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - கிண்ணியா ஸபருள்ளா
விலை - 200 ரூபாய்



நூலின் பெயர் - இவன் தான் மனிதன்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - சூசை எட்வேட்
விலை - 250 ரூபாய்



நூலின் பெயர் - இன்னும் உயிரோடு
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - எம்.ஐ.எம். அஷ்ரப்
விலை - குறிப்பிடப்படவில்லை




நூலின் பெயர் - மனதில் உறுதி வேண்டும்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - அ. விஷணுவர்த்தினி
வெளியீடு - ஜீவநதி
விலை - 200 ரூபாய்




நூலின் பெயர் - நினைவு நல்லது வேண்டும்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - அ. விஷணுவர்த்தினி
வெளியீடு - ஜீவநதி
விலை - 250 ரூபாய்





நூலின் பெயர் - ஓசை
நூலின் வகை - சஞ்சிகை
ஆசிரியர் - மூதூர் முகைதீன்
தொலைபேசி -
விலை - 30 ரூபாய்



நூலின் பெயர் - மனமோகி
நூலின் வகை - சஞ்சிகை
ஆசிரியர் - ரா. நித்தியானந்தன்
தொலைபேசி - 0776146229
விலை - 100 ரூபாய்




நூல் - கவின்
நூலின் வகை - சஞ்சிகை
ஆசிரியர் - கலா விஸ்வநாதன்
தொலைபேசி - 0776576728
விலை - 25 ரூபாய்




நூலின் பெயர் - தீ
நூலின் வகை - சஞ்சிகை
ஆசிரியர் -
தொலைபேசி - 077
விலை - 20 ரூபாய்

With Best Compliments From...

Luckyland




# LUCKYLAND BISCUIT MANUFACTURERS

NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.
TEL - 0094 - 081 - 2420574, 2420217. FAX - 0094 - 081 - 2420740
Email - luckyland@sltnet.lk

9772012670007

Designed By - H.F. Rizna